சிவமயம்

குமரகுருபரன்



த. 3124

மலர் 25] 1974-ஆம் ஆனி மீ 1-ம்வ (15-6-74) [இ

தனிப்பிரதி 45 பைசா வருடச் சந்தா ரூ 5-0

ஆசிரியர் குழு.

1. திரு. Dr. K. சிவராமன் அவர்கள், M. A.,

சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்

காசிச் சர்வகலாசாலை, காசி.

2. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A., B.O.L.

ஓய்வுபெற்ற செந்தமிழ்க்கல்லூரி பிரின்ஸிபால், திருப்பனந்தாள்.

3. திரு. பி. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள் B. A.

ஓய்வுபெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி, புளியங்குடி.

4. திரு. டி. எச் விவேகானந்தம்பிள்ளை அவர்கள் [J. P.]

B. A., L. T. ஓய்வுபெற்ற அசிஸ்ட்டண்டு கமிஷனர். சென்னை–86

5. திரு. Dr. T B. சித்தலிங்கம் அவர்கள் M. A. Phd.

அஞ்சல் வழிக்கல்வித்துறை, மதுரை பல்கலைக்கழகம், மதுரை–2

K. சுப்பிரமணிய பிள்ளை

கௌரவ நிர்வாக ஆசிரியர்

உள்ளுறை

			பக்கம்
1.	திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் அருளிய திருவுந்தியார்-உரைவிளக்கம்	...	289
2.	அருள்மொழி அமுது	...	293
3.	பேரா இயற்கை தரும் நிலை	....	299
4.	திருவாதவூரடிகாள்? (கவிதை)	...	304
5.	ஏது துணை பழிகார மனமே!	...	305
6.	வாக்கின் மன்னரும் வாதவூரடிகளும்	...	310
7.	இலக்கிய இன்பம்	....	315
8.	திருமுறையும் நம்பியாண்டார் நம்பியும்	...	318
9.	அலங்கார நாயகன்	...	324
10.	நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை	...	327
11.	திருவலஞ்சுழி சுவேத விநாயகருக்குச் சதுர்த்தி மோதக நிவேதன நிதி ரூ 1500	....	332
12.	மூன்றாம் திருமுறையின் முதற்பாடல்கள்-உரை		52 to 54

T-UN-444

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை



மலர் 25 | ஆனந்த ௵ ஆனி இதழ் 1௳ [15-6-74] | இதழ் 6

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே
திருச்சிற்றம்பலம்

திருவியலூர் உய்ய வந்த தேவ நாயனார்

அருளிய

திருவுந்தியார் — உரைவிளக்கம்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்
பாலகவி
திரு, வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை

பற்றை அறுப்பதோர் பற்றினைப் பற்றிலப்
பற்றை அறுப்பரென் றுந்தீபற
பாவிக்க வாராரென் றுந்தீபற. 15

கேவல நிலையிலும். சகல நிலையிலும் உயிருக்கு வந்த பற்றுக் களை அறுக்கத் தக்க திருவருட் பற்றைப் பற்றினால், தீய தாகிய அம்மலப் பற்றைச் சிவபெருமான் அறுத்துத் தள்ளு வார் அங்ஙனமின்றி, ஆன்ம போதத்தாற் பாவனை செய்து சிவத்தைக் கூடவேண்டுமென்று முயன்றால், அம்முயற்சி பயன் தராது.

அநாதி கேவலத்தில் உயிரைப் பற்றியது ஆணவமலப் பற்று அறிவுடையதாகிய உயிர் ஆணவ மலப்பற்றினால் அறி விழந்ததாகிச், சடப்பொருள் போலக் கிடந்தது. அருளேதிரு மேனியாகவுடைய சிவபெருமான், உயிர்களினிடத்து வைத்த பெருங்கருணையால், அவற்றின் மூலமலப் பற்றை விடுவிக்கத் திருவுளங் கொண்டு; கன்ம, மாயா மலங்களை அவற்றுடன் கூட்டினார். மூலமல நீக்கம் பெறுவதற்குச் சாதனமாகக் கிடைத்த கன்மமாயா மலங்களைக் கொண்டு, உய்தியில் நாட்டம் கொள்ளாது உயிர்கள் எல்லாம், செய்தக்க அல்ல செய்தும், செய்தக்க செய்யாதும் அல்லலுறுகின்றன. நிலை பேறில்லாதவற்றில் வைத்த பற்றினாலேயே நிலைபேறான இன்பப் பேறு பெற முடியாமல், பிறப் பிறப்புக்களிற்பட்டுப் பெருந் துன்பத்துக்கு ஆளாகிக் கொண்டிருக்கிற நாம், பற்று தற்குரியதாகிய திருவருட்பற்றைப் பற்றினால், இப்பொழுது நம்மைப் பற்றியிருக்கிற வேண்டாத தீயபற்று நம்மை விட்டு நீங்கும்.

பற்றின்றி வாழ முடியாத இயல்பையுடையது உயிர். அநாதி காலத்திலிருந்து ஆகாத பற்றைப் பற்றி வாழும் உயிருக்கு, அதிலிருந்து விடுபட வேறொரு பற்றை உரியதாக்க வேண்டும், இதனாலேயே "பற்றுக பற்றற்றான் பற்றினை அப் பற்றைப்பற்றுக பற்றுவிடற்கு" என்று திருக்குறள், அருளு கிறது. பற்றற்றான் பற்றைப் பற்றுவது பற்ற வேண்டாத தைப் பற்றியதிலிருந்து விடுதலை பெறுவதற்கேயாகும், உடைமைகளல்லாதனவாகிய உடம்பு, பொறிகள், உட் கரணங்களாகியவற்றை உடைமைகள் என்று கருதி அவற் றில் வைக்கும் பற்றினாலேயே ஓயாத துன்பத்தில் உழன்று கொண்டிருக்கிறோம். அந்தப் பற்றுக்களை அறுக்கத் தக்கது

ஒப்பற்ற திருவருட் பற்றே என்பதை அறிந்து அத்திருவருளை உயிர்பற்றினால், சிவபெருமான் அந்தப் பற்றையும் அறுத்து உயிரைச் சிவமாகவே ஆக்கிவிடுவார். அங்ஙனமின்றி உயிர் செய்யும் எந்தப் பாவனையினாலும் சிவபெருமான் அடையவர மாட்டார். கதிரவனைக் காணுவதற்கு அவனது கிரணமே துணையாயிருப்பது போலச் சிவத்தைக் காண்பதற்குத் திருவருளே துணையாயிருக்கும்.

உழவா துணர்கின்ற யோகிகள் ஒன்றோடும்
தழுவாமல் நிற்பரென் றுந்தீபற
தாழ்மணி நாவே போல் உந்தீபற. 16

சிவத்துக்கு இடம் ஆன்மா என்பதை முறையாக உணர்ந்து, வேறொரு இடத்தை அதற்காகத் தேடியலையாமல், நிலைபெற்றிருக்கின்ற சிவயோகிகள், ஒரோருகால் பிராரத்த கன்மம் வந்து பொருந்தினாலும், திருவடி ஞானம் கண்ணாக நிற்கையினால், ஒரு பொருளோடும் கூடாமல், தரையின் மீது வைத்துள்ள மணியினது நாக்கைப் போல, அசைவும் ஆரவாரமுமின்றி இருப்பார்கள்.

உண்மைப் பொருளாகிய சிவத்தைத் தேடி, எங்கெங்கோ அலைந்து கொண்டிருக்கின்ற அவயோகிகள் பலர் இங்கே உள்ளனர். அவர்களையும் அவர்கள் நெறிகளையும் விட்டு ராஜயோகமாகிய சிவயோகத்தில் நிலைநிற்கும் நற்பேறு சிற்சிலருக்கே வாய்ப்பது, "சிவயோகமே யோகம் அல்லாத யோகம் அவயோகமா மென்றறி' என்பது ஞான மொழி. வேண்டாதவற்றில் கூடும் கூட்டத்தை விடுத்து, வேண்டுவதாகிய சிவத்தைக் கூடும் கூட்டத்தால் உண்மையை உணர்பவர்கள் சிவயோகிகள். அவர்கள் தேகேந்திரிய மாதியவற்றுடன் கூடி வாழ்வார்களாயினும், மற்றவர்களைப் போல அவர்கள், உலகப் பொருள்கள் எவற்றுடனும் கூடி வாழ மாட்டார்கள். தேகம் உள்ளவரை இருந்து, அநுபவத்துக்கு வருவது பிராரத்தகன்மம். சிவயோகிகள் தேகத்துடன் கூடி வாழுகின்றவர்களென்னும் காரணத்தால், பிராரத்தகன்மம், மற்றவர்களைப் போல அவர்களுக்கும் விருப்பு வெறுப்புக் குரியனவாகிய இன்ப துன்பங்களை வழங்குமென்பது தவறு.

அங்கித்தம்பனே வல்லார்க்கு அனல் சுடாது. ஓடை தம் மந்திரம் உடையார்க்கு அருவிடங்கள் ஏரு, சிவஞானிகளுக்கு இருவினைகள் கூடா. தரையின் மீது வைத்துள்ள மணி, நாக்கை உடையதாயினும், அது அசைவையோ ஒலியையோ உடையதாகாதல்லவா?

எந்த வேளையிலும், எதெதையெல்லாமோ எண்ணி ஏங்கிக் கொண்டிருக்கும் மனத்தை, அவ்வாறு அலையவிடாமல் அடக்கி நிறுத்திச் சித்தத்தில் சிவத்தைக் கண்டு மகிழும் சிவயோகிகளை "முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பவர்" களென்றும் "பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்"களென்றும் திருமூல தேவநாயனுர் பாராட்டுகின்ருர்.

(தொடரும்)

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பி வைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்'

உள்நாடு ரூ. 5–00 வெளிநாடு ரூ. 7-00

செயலாளர், "ஞானசம்பந்தம்" அச்சகம்"

தருமபுரம், மாயூரம் P O.

சிவ சிவ]

அருள் மொழி அமுது

திரு. ஸ்ரீ ராமநாமப்பரதேசி அவர்கள்,
3119, கீழ இரண்டாம் வீதி.
புதுக்கோட்டை-1, திருச்சி மாவட்டம்.

—★—

12 இல்லையே இல்லாதவர்

திருச்சிற்றம்பலம்

''இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்''

நல்லவரோடு சேர்ந்தால் நன்மை விளையும் என்பது எவருமேயறிந்த ஒரு செய்தி இராமபிரானது திருமணத்திற்காக தசரதன் மிதிலைக்குப் பொன் உருளைகள் பூட்டப்பட்ட தேரில் வரும் போது, கற்பாறைகள் வழியாக அவற்றில் உராய்ந்து கொண்டு வந்த அந்தப் பொற் சக்கரங்களின் தங்க நிறம் சிறிது பாறையில் அப்பிக் கொள்ள அவைகள் பொற் பாறைகளா கற்பாறைகளா என எண்ணுமாறு தோன்றியது. இருண்ட கல்லையும் பொன்னிறமாக்கிய இரதம் - தெருண்ட மேலவர் சிறியவர் சேரினும் அவரை மாற்றிவிடுவர் என்ற வழக்கைஉறுதி செய்வதாயிருந்தது என்பர் கம்பர் அதுபோல காவிரி கடலில் சென்று கலந்ததால், ஒன்றுக்கும் உதவாத கடலும் புனிதமடைந்தபடியால், காவிரி நீராடும் அடியார்கள் கடலிலும் நீராடினர், உடல் தூய்மைக்குக் கூட உதவாத கடல், காவிரி தன்னிடம் கலந்து மேன்மையுடண்டாக்கியதால் உயிரையும் தூய்மை செய்வதாயிற்று என்பது குறிப்பு. காவிரி கடலில் கலக்குமிடம் பூம்புகார் என்ற நகரம்.

மண்புகார்: வான்புகுவர்: மனமிளையார்: பசியாலும்
கண்புகார்: பிணியறியார்: கற்றாருங் கேட்டாரும்
விண்புகாரென வேண்டா: வெண்மாட நெடுவீதித்
தண்புகார்ச் சாய்க் காட்டெந் தலைவன் தாள் சார்ந்தாரே

என்று ஞானசம்பந்தரால் பாடப் பெற்ற சிறப்புடையது. புகார் நகரம் பற்றிக் கேட்டவரும் அறிந்தவரும் பேரின்ப மடைவர். விண்ணுலக மட்டுமில்லை, அதனைக் காட்டிலும் மேலான சிவலோகமேபெறுவர் என்று கூறினர். அப்பதியில்

வணிகர் குலத்தில் பிறந்த செல்வந்தரான இயற்பகையார் அடியார்கள் எது கேட்டாலும் இல்லையே என்னாது கொடுக்கும் இயல்புடன் விளங்கினார். எல்லாம் எனக்கு வேண்டும் என்ற உலகத்தினுடைய இயல்பிற்குப் பகையானவர். எல்லாம் சிவனடியாருக்கே என எண்ணுபவரின் இயல்புக்குப் பகையாதவர். எனவே அவரது திருநாமம் இயற்பகையார் என விளங்கியது. அவரது இருப்பிடம் வந்து எவர் எது கேட்டாலும் அடியாருக்கு அளித்து வந்ததை உலகிற்குக் காட்ட விரும்பினான் சிவபெருமான். திருமேனியில் திருநீறு தரித்தவேதியராய், ஆனால், பிறபெண்டிரை நினைக்குந்தன்மையுடையவன் போல ஒரு தூர்த்த வேடம் கொண்டனர். பிறர் மனையை விரும்பும் படியான வேடம் தரிக்க உமையம்மை உடன்பட மாட்டாள். அவள் அறியாது வேடம் தரித்தாரோ எனில், பாதியுமை உருவான பெருமானால் அது இயலாது. ஆதலால் எப்படி என்று புரியவில்லை. தனது தொண்டரில் ஏவருக்கும் எதையும் மறுக்காதவர் எனக் காட்ட வந்தார்.

ஆயுநுண் பொருளாகியும் வெளியே
அம்பலத்து நின்றாடுவார் உம்பர்
நாயகிக்கும் அஃதறியவோ? பிரியா நங்கை
தானறியாமையோ? அறியோம்
தூயநீறு பொன்மேனியில் விளங்கத்
தூர்த்த வேடமும் தோன்ற வேதியராய்
மாயவண்ணமே கொண்டு தம்தொண்டர்
மருத வண்ணமும் காட்டுவான் வந்தார்.

அப்படி வந்த கைதவ (வஞ்சனையுள்ள)வேதியர் 'நீர்அடியார் வேண்டியது எதுவானாலும் மறுக்காது கொடுக்கின்றேன் என்று கூறுவதாக் கேள்விப்பட்டு நான் கேட்பதை நீர் கொடுக்க இசைந்தால் கேட்கலாம்'' என்று வந்தேன்' என்றார் நாயனார்'' என்னிடம் எது இருந்தாலும் அது அடியவர்களின் உடைமை; சந்தேகமேகிடையாது. எதுஎன்னிடம்உண்டோ கேட்கலாம்'' என்றார். ''உன்மனைவியை வேண்டி வந்தேன்'' என்றார் இறைவர் அதுகேட்ட நாயனார் மேலும் மகிழ்வடைந்தார். அவரைத் தூய தொண்டனார் எனக் குறிப்பிடுகின்றது அருள்மொழி வாக்கு. மனைவியை வேண்டி வந்தேன் என்றாரே தவிர விரும்பி வந்தேன் எனக்கூறவில்லை என்பது

கவனிக்கத் தக்கது. அவ்வாறு கேட்ட வேதியரைச் சிறிதும் கோபிக்காமலோ, திடுக்கிடாமலோ யிருந்ததுமல்லாமல் மகிழ்வுடன் "அடியார்கள் தவறுன காரியம் செய்யமாட்டார்கள்" என்று பூரணநம்பிக்கை வைத்தநாயனுரை தூயதொண்டனுர் எனக் குறிப்பிட்டார் "இது என்னிடம் உள்ளதுதானே" என உள்ளே சென்ற தன் கற்பின் மேம்படு காதலியாரை நோக்கி "விதி மணக்குல மடந்தை! உன்னை இவ்வடியாருக்குத் தந்தேன்" எனக்கூற அம்மாதரசி சிறிது மனம் கலங்கித் தெளிந்தார்.

இதுஎனக்கு முன்புள்ளதே வேண்டிஎம்பிரான்
செய்தபேறு எனக்கென்னுக்
கதுமெனச் சென்று தம்மனைவாழ்க்கைக்
கற்பின் மேம்படு காதலியாரை
"விதிமணக்குல மடந்தை! இன்றுனை
மெய்த்தவர்க்கு நான் கொடுத்தனன் என்ன
மதுமலர்க்குழல் மனைவியார் கலங்கி
மனந்தெளிந்தபின் மற்றிது மொழிவார்.

"சஹதர்மிணி" என்றுவட மொழியில் மனைவியை அழைப்பார் கணவன் செய்யும் தருமங்களுக்குத் துணையாகநிற்பவர் நாயனுரின் மனைவியார் அன்பிற்கு இருப்பிடமானவர்" என்று அவ்வம்மையைச் சிறப்பித்து, அவ்வளவு உயர்ந்த மனைவியையே தரும் கொடைத் தன்மையைக் கூறினுர். 'உன்னை மெய்த்தவருக்குக் கொடுத்தேன் என்று கூறியது நாயனுரின் சிவனடியாரின் மீது பக்தியைக் காட்டுகின்றது திருமணம் செய்து கொள்ளும் காலத்துத் தாரை வார்த்து" இப்பெண் உன்னுடைய பொருள். உனக்கே உரிமையானவள்" எனக் கொடுப்பதால் தன் சொற்படி நடக்க வேணுமென்று குறிப்புத் தோன்ற மனைவியாரை 'விதிமணக்குல மடந்தை" எனக் கூறி அழைக்கின்றுர். "கடைசிவரை காப்பேன் என நம்மைக் கைப்பிடித்த நாயகரின் சொல்லுக்குக் கெடுதி நேருமோ? இந்நிலை கற்பிலக்கணத்தினின்று மாறுபடுமோ? உலகிலில்லாததொரு வழக்கைபன்றே கேள்விப்படுகிறோம்? சிவபக்தராயிருப்போர் தரும விரோதமாக பிறர் மனைவியைக் கேட்கமாட்டாரே! ஒரு வேளை நமது பக்தியைப் பரிசோதிக்க இப்படி வந்திருக்க

லாமோ? வேறு மதஸ்தர்கள் எவராவது கபடமான வேடங் கொண்டு இவ்வாறு வந்துவிட்டார்களோ? அடியவர் பரதாரக மனம் செய்பவர். அதற்கு இயற்பகையாரும் உடந்தையென உலகம் எண்ணுமோ?'' எனப் பலவிதமாக எண்ணிக் கலங்கினர், கணவர் ஆணைவழி நிற்பதே கடன் எனத் தெளிந் தார் ''என் உயிருக்கு நாதராகிய தாங்கள் அருள் செய்த வண்ணம் நடக்கிறேன்'' என்று கூறிக் கணவனுரை வணங்க இயற்பகையாரும் பதிலுக்கு வணங்கினர். நம் காலத்தில் உடம்பிற்கு மாத்திரம் கணவன் எனத் தவறுதலாக எண்ணு கிறார்கள். நீர் என் உயிருக்கும் கணவர். அதனால் சொற்படி நடப்பேன்'' என்றார் அம்மையார். சிவனடியாருக்கு என அந்த அம்மையை அளித்துவிட்டதன் காரணமாக இயற்பகை யார் அம்மையை பதிலுக்கு வணங்கினர் என்பது குறிப்பு. நாயனரின் மனைவி அதற்குப்பின் என்ன செய்வது என அறி யாமல் திகைத்து நின்றாள்.

இன்று நீரெனக்கருள் செய்த திவேல்
என்னுயிர்க்கொருநாத! நீ உரைத்த
தொன்றை நான் செயும் அத்தனையல்லால்
உரிமைவேறுளதோ எனக்கு? என்று
தன்றனிப்பெருங் கணவரை வணங்கத்
தாழ்ந்து தொண்டனர் தாமெதிர் வணங்கச்
சென்றுமாதவன் சேவடி பணிந்து திகைத்து
நின்றனள் திருவினும் பெரியாள்

அந்நிலையில் இயற்பகையார், ''அடியேன் இன்னும் என்ன செய்ய வேண்டும்?'' என்ன, வந்தவர் ''இந்தப்பெண்ணை நான் அழைத்துச் செல்லுவதற்கு ஊர் கடக்கும் வரை நீயும் வரவேணும்'' என்றார் 'நானே அதைச் செய்திருக்கவேணும் தாங்கள் கூறும்வரை அவ்வாறிருந்தது என் குற்றம்'' எனக் கூறி, தாம் உடை உடுத்தி வாளேந்தி, மாதவரையும் நங்கை யையும் முன்னே செல்லவிட்டுப் பின்னே வந்தார். அதுபோது சுற்றத்தார்கள் அவர்களைச் சுற்றிக்கொண்டு ''இயற்பகை பித் தனுனல் நீ இந்தப் பெண்ணை அழைத்துச் செல்ல விடு வோமோ?'' எனச்சண்டைக்கு வந்து விட்டனர். அது கண்டு தூர்த்தவேடம் கொண்ட இறைவர் அந்த அம்மையை பயந்

ததுபோல் நோக்க "இயற்பகையார் வென்று விடுவார். நீங்கள் கவலைப்பட வேண்டாம்" என்றார். கணவன் பெயரை மனைவி கூறக்கூடாது. தன்னை அந்த தூர்த்தரான சிவனடியாருக்கு உடைமையாக்கி விட்டதால், தான் அவரது பொருளாகி விட்டபடியால், இயற்பகை எனப்பெயரையே குறிப்பிட்டாள். உறவினர்கள் "அடே! வெட்கம் மானமில்லையா? மனைவியை இத்தூர்த்தனுக்கு அளிப்பதா? நாங்கள் சாவோமே தவிர விடமாட்டோம்" என்றனர்,

ஏட! நீ என்செய்தாயால்? இத்திறம் இயம்புகின்றாய்?
நாடுறு பழியுமொன்னார் நகையையும்: நாணாய் இன்று
பாடவமுரைப்ப துன்றன் மனைவியைப் பனவற் கீந்தோ?
கூடவே மடிவதன்றிக் கொடுக்கயாமொட்டோம் என்றார்.

அதற்கு இயற்பகையார் "உங்களனைவரையும் கொன்று' இவரைப் பத்திரமாகச் செல்லுமாறு செய்வேன்" என்று கூறி எல்லோரையும் கொன்று குவித்து விட்டு, தன்னை வேறு எவரும் எதிர்க்க ஆளில்லாது தனியே நின்றார். "நீங்கள் இனிப்பயமில்லாது செல்லுங்கள்" என அவர்களையனுப்பினார். அந்நிலையில் தூர்த்தராக வந்தவர் "இனிநீர் திரும்பச் செல்லலாம்" என்றார். இயற்பகையார் அவரை வணங்கித் திரும்பினார். தூர்த்தராக வந்த இறைவன் "திரும்பிக்கூடப் பாராமல் செல்லுகின்றான்'; எனமகிழ்ந்து 'இயற்பகை ஓலம்!' என ஓலமிட்டழைத்தார்,

இயற்பகை முனிவா வோலம்: மீண்டு நீ வருவாய் ஓலம்!
அயிர்ப்பிலா தானேயோலம்! அன்பனே ஓலம் ஓலம்!
செயற்கருஞ் செய்கைசெய்த தீரனே ஓலம் ஓலம் என்றான்
மயக்கறு மறையோலிட்டு மாலயன் தேடநின்றான்.

இது கேட்டு திடுக்கிட்டநாயனார் "என்ன! இன்னும் எவராவது வருகின்றார்களா? இதோ வந்தேன்!" என்றபோது இறைவன் மறைந்து வேறு கோலங்கொண்டு காட்சிகொடுத்தார். தூர்த்த வேடத்துடன் வந்தது திரோதன சக்தி. ரிஷப வாகனத்தில் இப்போது கொடுத்தது அருட்சக்தி தன்னை மறந்த நாயனார் இறைவனைக் கண்டு ஆடிப்பாடி அகமகிழ்ந்து "என்ன சொல்வேன். எனக்கு நன்மை செய்த இப்பிறவி

பயனுடையதாயிற்று. இந்த இன்பம் தந்த திருவடி போற்றி எனக் கூறித்தொழுதார்.

சொல்லுவதறியேன்!வாழி: தோற்றிய தோற்றம்போற்றி!
வல்லைவந் தருளியென்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி!
எல்லையில் இன்பவெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி!
தில்லையம் பலத்துளாடும் சேவடி போற்றி என்ன.

''நம்மீது இவ்வளவு அன்பு காட்டிய நீ உன் மனைவியுடன் நம் முடனேயேபோ!'' என்றார் வள்ளலான நாயனாருக்கு! ''எந்த உலகிற்குச் செல்ல விருப்பமோ செல்க'' என வள்ளலாகவே அருளினார் இறைவன் நற்பேறளித்த இறைவன் மறைந்தார். நாயனாரால் போரில் கொல்லப்பட்ட உறவினரும் வீரசுவர்க்கம் பெற்றனர். தன் இல்லாளையே கேட்ட போது ''இல்லையே'' என்னாத இயற்பகை எனத் தொனிக்கும் படிப்பாடிப்பரவுகிறது திருத்தொண்டத்தொகை.

இயற்பகை நாயனார் திருவடிகளே சரணம்

திருச்சிற்றம்பலம்

பேரா இயற்கை தரும் நிலை

திரு; சிவ. சண்முகசுந்தரம் அவர்கள்:
அரசினர் உயர்நிலைப்பள்ளி,
ஒரக்காட்டுப் பேட்டை

முழுமுதற் பொருளாகிய கடவுளின் துணை நமக்குக் கிடைக்க அக்கடவுளின் அருள் தேவை இதனை,

'அவனரு ளாலே அவன்றாள் வணங்கி'

என்னும் மாணிக்கவாசகர் அருள் வாக்கினாலும்'

'ஆதாரம் இலேன் அருளைப் பெறவே
நீதான் ஒருசற் றும்நினைந் திலையே'

என்னும் அருணகிரிநாதர் திருவாக்கினாலும் அறியலாம்.

மக்களைத் தோற்றுவித்த கடவுள் அம்மக்களை உய்விக்கச் செய்கின்றார். இதனையே குமரகுருபரசுவாமிகள் கந்தர்கலி வெண்பாவில், "இருள்மலத்துள் மோகமுறும் பல்லுயிர்க்கு முத்தியளித்தற்கு மலபாக முறவே கடைக்கண் பாலித்திருக் கின்றார்" என்கிறார், கடவுளின் கடைக்கண் நம்மேல்பாலிக்க மெய்வாய் விழிநாசியொடும் செவிஆம் ஐவாய் வழி செல்லும் அவாவினையும்நானென்னும் அகந்தையையும் நீக்க வேண்டும்

'ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்'

என செந்நாப் போதாரும் செப்புகின்றார்.

'எண்ணெய் படிந்த ஏட்டில் மை படாதது போல் பாசம் நிறைந்த மனதில் இறைவனருள் தோன்றாது': 'மண்ணுடன் கூடிய சுரக்குடுக்கை நீரில் அழுந்தியும் மணலற்ற சுரக்குடுக்கை நீரில் மிதப்பது போலும் பாவம் செய்தவர் நரகத்தில் ஆழ்ந்தும் பாவமற்றவர் மேலுலகமும் அடைவர்' என்பன ஆன்றோர் கூற்றுகள். இக்கருத்துகளினாலும் நாம் ஆசையையும் பாவத்தையும் அகற்ற பிறவி நீங்கும் என்பது தெளியலாம்,

பிறவி நீங்க மனதைத் தூய்மைப் படுத்துதல் வேண்டும். உடலை நீரினால் தூய்மைப் படுத்துவது போல் மனதை ஆண்டவன் திருநாமம் கூறுவதன் மூலமே தூய்மையாக்க முடியும். கடவுள், நம்பினவர்க்கு நடராசன், நம்பாதவர்க்கு எமராசவனுவான். எனவே கடவுளை நம்பி உளம் குளிர்ந்த போதும் நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும் மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும் கடவுளையே நினைந்து வாழ்ந்துதல் வேண்டும். 'சிவாயநம' வென்னும் திருவைந்தெழுத்து உணரா அறிவிலோர் நெஞ்சு இருண்டிருக்குமாகையால், திருவைந்தெழுத்தினை உணர்ந்து அவர் திருப்பெருமையினை நாளும் புகழ்ந்தோதுதலையும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நெறிகளின் மூலம் அவருக்குத் தொண்டு புரிதலையும் பயனெதிர் பாராக் கடமைகளாகக் கொள்ளவேண்டும். கடவுளின் கருணைபெற சாரம் வீடுகட்டப் பயன்படுவது போல் ஆலய வழிபாடும் முதலில் அவசியம்.

கடவுள் நம் குற்றங்களைப் பொறுப்பவர். இதனை,

> ''குற்றம் புரிதல் எனக்கியல்பே
> குணமாகக் கொள்ளல் உனக்கியல்பே'' —இராமலிங்க அடிகள்.
> ''ஏதுபிழை செய்தாலும் ஏழையேனுக்கு இரங்கித்
> தீது புரியாத தெய்வமே'' —சிதம்பர சுவாமிகள்.

ஆகியோர் கூற்றுக்களினின்று அறியலாம்.

> ''..பொது
> ஆட்டிற்கு வல்ல னொருவற்கு ஞான அமு துதவி
> நாட்டிற் கிலாத குடர்நோய் நினக்குமுன் நல்கினும்''

என்று சிவப்பிரகாச சுவாமிகள் நால்வர் நான்மணி மாலையில் கூறியுள்ளார். இதனால், சிவபெருமான் திருஞானசம்பந்தருக்கு ஞான அமுது ஊட்டியும், திருநாவுக்கரசருக்கு சூலை நோய் கொடுத்தும் ஆட்கொண்டார் என்பதனை உணரலாம். எனவே, கடவுள் அடியார்களை அவரவர் நிலைகளுக்கேற்ப அன்பு வழியிலும் தண்டித்தும் அருள் புரிகின்றார் என்பதனையும் அறியலாம்.

நீர் நிலைகளில் நீரின் மட்டம் எவ்விடத்திலும் சமமாக இருப்பது போல் கடவுள் ஒவ்வொரு மனிதனையும் சமஇன்ப

துன்பங்களையே அனுபவிக்கச் செய்கின்றார். மழை பொழியும் பொழுது வானத்தை நோக்கியுள்ள குடத்தின் அளவுக்கு ஏற்ப அதில் நீர் நிரம்பும். அதுபோல் உயிர்களும் அவ்வவற்றின் நற்செயல்களுக்கேற்ப ஆண்டவனின் அருளைப் பெறும்,

முழுவெளிச்சத்தில் நிற்கும் பொழுது நிழல் தெரியாது போல் கடவுளைச் சார்ந்திருப்போர்க்கு உலகக் காட்சித் தெரியாது, உலகக் காட்சித் தெரிகின்ற வரையில் பாலிற்படு நெய் போல் மறைந்துள்ள கடவுளின் காட்சித் தெரியாது. இக்கருத்தினை, 'நாயைக் கண்டால் கல்லைக் காணோம், கல்லைக் கண்டால் நாயைக் காணோம்' என்னும் பழமொழியாலும்,

'மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்'

என்னும் திருமந்திரத்தாலும் உணரலாம்.

உலகக் காட்சி நீங்க மனதை அடக்கி மனத்தூய்மையுடன் தியானம் செய்தல் வேண்டும். தியானம் செய்தாலன்றி மனதை அடக்க முடியாது. மனதை முயன்றடக்கித் தொடர்ந்து தியானம் செய்வதன் மூலம் மனம் இருவினை ஒப்பினால் தூயதாகி அவாவற்று நின்ற போது சத்திநிபாத நிலையடையும் அருள் கிடைக்கிறது.

'வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்'
'எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்'

என்பன வள்ளுவரின் வாய்மொழிபாகும். எனவே பெறற்கரிய மானிடப் பிறவியைப் பெற்ற மனிதன், இறைவனின் இன்னருளைப் பெற உயிர், உடலினின்று நீங்கு முன்பே கடவுளின் கழலடியை வணங்க வேண்டும்.

அடியார்கள் எனத் திருத்தொண்டர் புராணத்துள் கூறப்படும் நாயன்மார்களின் ஒவ்வொருவர் வரலாற்றிலும் அவர்களது அன்புச்செயல்களினால் அவர்களுக்குப் பேராஇயற்கை

நிலைதர விரும்பி அவர்கள் வாழ்வில் சோதனை நிகழ்த்துவதை யும் அச்சோதனையில் வெற்றிப் பெற்றவர்களுக்கு கடவுளின் கருணை கிட்டியதனையும் பெரிய புராணத்துள் பரக்கக் காணலாம்.

'இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படருநெறி பணியா ரேனுஞ் – சுடருருவில்
என்பருக் கோலத் தெரியாடும் எம்மனுர்க்
கன்பரூ தென்நெஞ் சவர்க்கு'

என்று காரைக்காலம்மையாரும்,

'இடரினும் தளரினு மெனதுறு நோய்
தொடரினு முன்கழல் தொழு தெழுவேன்'

என்று திருஞானசம்பந்தரும் விளம்புவதால் ,இறைவனை இடையருது என்புருகத் தொழுதலினலேதான் அருள்கிடைக் குமென்பது கண்கூடு

கடவுள், திருப்பாற்கடலில் உண்டான நஞ்சைதானுண் டார்; தருமியின் பொருட்டு நன்பாட்டுப் புலவனுய்ச் சங்க மேறினுர்; வந்தியின் பொருட்டு கூலியாளாய் வந்தார்; பாண பத்திரர் பொருட்டு விறகு விற்ருர். சுந்தரருக்காக அந்தணர் வடிவு கொண்டு தூது சென்ருர்; அப்பரைச் சந்திக்க முனி வர் வேடம் பூண்டார் என புராணங்கள் புகலுவதினுல் ஒரா தார் உள்ளத்துள் ஒளிக்கும் படியான ஒளிவடிவான இறை வன் உயிர்களிடம் காட்டும் கருணையின் திறத்தினை அறிய லாம்.

திருவானைக்காவில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் திரு முடிமேல் சருகுகள் வீழா வண்ணம் நூல்வலைப் பந்தர்செய்த சிலந்தி அடுத்த பிறவியில்கோச் செங்கண்ணனுகவும்; ஆலயத் திலுள்ள விளக்குத்திரி, ஓடிய எலியின் கால்பட்டு சுடர்விட் டெரிய அவ்வெலி அடுத்த பிறவியில் மகாபலிச் சக்கரவர்த்தி யாகவும் பிறவியெடுத்தன என்பதனை புராணங்கள்வாயிலாகக் காணலாம்.

ஆண்டவன் திருவருளைப் பெற விழையும் திருஞான சம்பந்தர்.

''கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய்ப் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதிநீ பாதிரிப் புலியூரரனே''

என்று கூறுகின்றார். ஆண்டவன் அருள் பெறும் திறத்தினை அறிந்த அப்பரடிகள்,

''மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மை யாம்களையை வாங்கிப்
பொறை யெனும் நீரைப் பாய்ச்சி
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்பா ராகில்
சிவகதி விளையு மன்றே''

என்று கழறுகின்றார்,

இருவர் பாடல்களாலும் கடவுளின் கருணை கிடைக்க நாம் செய்ய வேண்டிய செயல்களையறியலாம்.

வாழச் செய்வது நல்வினையல்லது, ஆழுங்காலே புணை பிறிதில்லை எனவே எவ்வுயிரும் தம்முயிர் போல் கருதி அன்பு நெறி நின்று மனத்துக்கண் மாசில ராய் அறவழி நடந்தால் கடவுளின் கருணை கிடைக்குமென்பது திண்ணம்.

''சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கு மெங்கள் பெருமான்''

என்னும் மாணிக்கவாசகரின் மணிமொழியினுலும் அடியார்களுக்கு கடவுள் கருணை காட்டுவான் என்பதுறுதி.

"திருவாதவூரடிகாள்...!"

'செஞ்சொற் கவிமணி'
திரு; புலவர்: மா. வேங்கடேசன் அவர்கள்,
பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி [தமிழாசிரியர்]
காஞ்சிபுரம்-1

தெய்வத் தமிழோடு தேசமெலாம் ஈடேற
உய்விக்கும் சைவம் உயர்ந்தோங்க-வையத்தில்
தென்னுட்டில் வந்த திருவாத வூரடிகாள்!
என்பாட்டில் நிற்க இசைந்து.

1) நாடிவரும் தேவர்களும் நண்ணற் கரியசிவன்
தேடியுனை யடைந்து தென்புடனே-கூடிப்
பதமடையும் ஞானம் பரிந்துரைத்தான் என்றல்
எதுவடையும் நின் அன்பிற் கீடு?

2) சேயுற்ற நோய்கண்டு சிந்தை மிகவாடித்
தாயுற்ற துன்பைப் போல் தாண்டவனும்-நீயுற்ற
நெஞ்சத் துயரை யெலாம் நீக்கற்குப் பட்டானே
பஞ்சவன் கண்படாப்பாடு.

3) கேட்டு மகிழ்ந்ததுடன் கீர்த்திமிகும் நின்பாட்டை
ஏட்டில் எழுதினுன் ஈசனெனின்-வீட்டை
அடைதற்கு வேண்டுமோ அன்புநெறி வேறு?
விடையான் கொள் வாசகத்தை விட்டு.

4) சோற்றுக்கும், பெண்டிர் சுகத்திற்கும், அஞ்சவரும்
கூற்றுக்கும் கூடி அழுவார்கள்!-பேற்றிற்
சிறந்த சிவனருளைச் சிந்தித் தெவரழுதார்?
பிறந்தவருள் நின்போலப் பேசு!

சிவ சிவ]

ஏது துணை பழிகார மனமே!

வாலாம்பாள் அம்மாள் அவர்கள்,

டால்மியாபுரம் (திருச்சிராப்பள்ளி ஜில்லா)

(ஆறுமுகப் பெருமான் மீதும் அருணகிரி நாத சுவாமிகள் பாலும் அசையாப் பற்று கொண்டு அநேக பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதி வரும் 'அருணகிரிதாசன்' P. S. இராமமூர்த்தி அவர்களின் அன்புத் தாயாராவார் இக்கட்டுரை ஆசிரியை. 85வது வயதை தாண்டிக்கொண்டிருக்கும் இம்முதாட்டி புராணங்களிலே நல்ல ஈடுபாடு கொண்டவர், அடியார்களின் அரிய உபதேசங்களை அணு அணுவாக அறிந்தவராவார்)

சேயவன் புந்தி வனவாச மாதுடன் சேர்ந்த செந்திற்
சேயவன் புந்தி கனிசா சராந்தக சேந்தவென்னிற்
சேயவன் புந்தி பனிப்பானு வெள்ளி பொன் செங்கதிரோன்
சேயவன் புந்தி தடுமாற வேதருஞ் சேதமின்றே — கந்தரந்தாதி

வள்ளிநாயகி மனம் மகிழ் முருகா! திருச்செந்திலாண்டவா! அவுணகுல காலனே! கந்தப்பெருமானே! என்று உள்ளன்புடன் துதித்து கருணையங் கடலாகிய கந்தப்பெருமானின் கமலத் திருக்கழல்களைச் சரண் அடைந்தால், தங்களைப் பிடித்து வறுமையில் வாட்டும் நவக்கிரகத் தோஷங்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும்! ஆறுமுகப் பெருமானின் அடிகளைப் பணியும் அன்பர்களுக்கு, நவக்கிரகங்கள் பல நன்மைகளையே கூட்டிவைக்கும். மேலே கண்ட அருணகிரிப்பெருந்தகையின் கந்தரந்தாதிச் செய்யுளின் பொருளே இங்கு எடுத்துரைக்கப்பட்டது.

இன்று உலகத்திலே சாந்தி. சமாதானம் குறைந்து நீதி, நேர்மை, தர்மம் மறைந்து சண்டைகள், சச்சரவு, பஞ்சம, பிணி தாண்டவமாடுகிறதென்றால் அதற்குக் காரணம் நவக்கிரகக் கோளாறுகளே என்று கூறினல் மிகையாகாது.

கட்டுரைக்கு எடுத்துக் கொண்ட தலைப்பைச் சற்று விரிந்து காண்போம்.

''நீர்க் குமிழிக்கு நிகரென்பர் யாக்கை; நில்லாது செல்வம்
பார்க்கு மிடத்தந்த மின் போலுமென்பர்''

என்று கந்தரலங்காரச் செய்யுட்கள் ஒன்றில் அருணகிரிப் பெருந்தகை மனித வாழ்வைப் பற்றி அரிய உண்மையை எடுத்துரைப்பார். தோன்றித் தோன்றி மறையும் நீர்க்குமிழி களை யொத்ததே மானிட உடல்! உடல் ஓடாய்மாற உழைத் துச் சேர்க்கும் பெரும் பொருட்களும் உடலோடு வாராது, வானத்தில் தோன்றும் மின்னலைப் போன்று வந்த வழிபார்த்து ஓடிவிடும்!

ஆவி பிரிந்தால் அண்ட முடியாத நாற்ற உடலையும் மலை போல் குவிந்துபின், பிறைமதிபோல் குறையும் பொருளையும் நிலையெனக் கருதி காலத்தைக் கடத்தி என்றும் நிலையானபரம் பொருளாகிய ஆறுமுகப் பெருமானின் திருவடிகளை மறந்தால், நினையாவிட்டால், கடைசிநாள் யாத்திரையின்போது யார் துணைபுரிவார். கடவுளை, கந்தப்பெருமானை மறந்தவர் யார் வாழ்ந்தார்! அக்கருணைக்கடலை நினைந்தவர் யார் தாழ்ந்தார்!

தொல்லைக் குடும்பத் துயரதனில்
தொலைத்தே னந்தோ காலமெலாம்
அல்ல லகற்றிப் பெரியோரை
அடுத்து மறியேன் அரும்பாவி
செல்வத் தணிகைத் திருமலைவாழ்
தேவா! உந்தன் சந்நிதிக்கு
வில்வக் குடலை யெடுக்காமல்
வீணுக் குடலை யெடுத்தேனே

— *இராமலிங்க வள்ளலார்*

''திருத்தணிப் பெருமானின் திருவருளைப்பெற அடியர் களை அணுகி நல்வழி தேடாமல் தொல்லை மிகுந்த சம்சார சாகரத்தில் அகப்பட்டுக் கொண்டு வாழ்நாளெல்லாம் வீணாக தவிக்கின்றேனே! ஆறுமுகப் பெருமானுக்கு அர்ச்சனைக்காகப் பயன்படும் வில்வ தளங்களைத் தாங்கும் வில்வக் குடலையாக ஏன் என்னைப் படைக்கவில்லை அந்தத் திருத்தணி குமரப் பெரு

மான் என்று அருட்தாகம் மேலிட ஆண்டவனிடம் முறையிடுகிறார் இராமலிங்க வள்ளலார்.

''யமன் வரும் வேளையில் ஏது செய்வாய் பழிகார மனமே'' என்று எச்சரித்து அரிய உபதேசங்களைக் கூறுகிறார் தாயுமான அடிகள்: ஆறுமுகப் பெருமானை என்றும் நினைவில் கொள்ள வேண்டும் என்பதே அடியார்களின் உபதேசங்களாகும்.

வயதும் படவெழுந்து பிணியுந்திமிதிமென்று
　　வரவும் செயலழிந்து ஏிருமலுமாகி
அனமும் செலுதலின்றி விழியும் சுடர்களின்று
　　முகமும் களைகளின்று சரியென நாடி
மனையின் புறவிருந்த வினமும் குலைகுலைந்து
　　கலகம்செய விருண்ட யமன் வரும் வேளை
　　ஏது துணை பழிகார மனமே? — *தாயுமான அடிகளார்*

வாழ்க்கையின் கடைசிப் பகுதியைப் படம் பிடித்துக் காட்டி நமது விழிப்புணர்ச்சியைத் தூண்டி நம்மை உஷாராக இருக்கும்படி அருளோடு கூறுகிறார் அடிகளார்.

கணப்பொழுதும் நினைவிலிறுத்த வேண்டிய கடவுளின் கருணையை, அவன் திருவடிகளை மறந்து, ஓடும் காலத்தின் வேகமறியாது வாழ்க்கையை வளப்படுத்த, வண்டிமாடுபோல் ஓடி உழைத்து உடல் உலுத்துப் போகிறது! மனம் தளர் வெய்துகிறது! கடவுளை நினைத்துப் பழகாத மனம் சஞ்சலப் படுகிறது. இளம் வயதிலேயே இறைவனை நினைத்துப் பழகி இருந்தாலல்லவோ முதுமைப் பருவத்தில் கடவுள் நினைப்பு வரும்! காலம் ஓடிய வேகத்தில் முதுமை நிலையை அடைகிறது உடல்!

ஓடியாடி உலுத்துப்போன உடலை வந்து பற்றிக்கொள்ளும் பலவித பிணிகள் சாதாரண பிணிகள் கூட வற்றிப் போன உடலைப்பற்றினுல் பெரும் கேடுகளை விளைவிக்கும் என்ருல் மிகையாகாது. தாங்க முடியாத இருமல் வந்து உடலை உலுக்கும். கபநோய்த் தாக்கி கருத்தைக் குலைத்து அழிக்கும். தொண்டை அடைந்துவிடும்; வாயில் சென்ற ஆகாரம்செல்ல வழியின்றி திரும்பிவிடும். ஒளியிழந்து பீளை வழியும் கண்கள்!

தன்னைச் சுற்றி நிற்பவர்கள் யார் என்று அறிந்து கொள்ள முடியாத பரிதாபநிலை! கடைசிப் பயணத்திற்கேற்ற 'களை' முகத்திலே கூடிவிடும்! சுவாசப் பையை விட்டு வெளியே சென்ற மூச்சுக்காற்று மீண்டும் சுவாசப் பையை எட்டுமா என்ற சந்தேகச் சூழ்நிலை!

இந்தப் பயங்கரச் சூழ்நிலையை அருணகிரிநாத சுவாமி களும் எடுத்துக் கூறுவார்:—

....இருமல்
கிண்கிணென, முனுரையே குழற, விழி
துஞ்சு குருடு படவே, செவிடுபடு செவியாகி
வந்த பிணியு மதிலே மிடையு மொரு
பண்டிதனு மெயுறு வேதனையும், இள
மைந்தர் உடமை கடன் ஏதென முடுக துயர்மேவி
மங்கை யழுது விழவே, யமபடர்கள்
நின்று சருவ மலமே யொழுக உயிர்
மங்கு பொழுது கடிதே மயிலின் மிசை வரவேணும்
— திருப்புகழ் (திருச்செந்தூர்)

இந்தச் சூழ்நிலையைக் கண்டு பீதி கொண்டு பெற்ற அன்னையும், கொண்ட மனைவியும் மனம் தளர்வுற்று கண்ணீர் பெருக்குவர். அன்போடு வளர்க்கப்பெற்ற பிள்ளைகள், அப்பா வுக்கு எவ்வளவு சொத்து இருக்கிறது; எவ்வளவு கடன் இருக் கிறது என்ற கணக்கில் கருத்தைச் செலுத்திக் கொண்டிருப் பார்கள்! உடலில் இருந்து மலம், சலம் தானே ஒழுக உயிர் ஊசலாடும் தன்மை! இந்த விபரீத நிலையை அறிந்த குடும்பத் தார்களும்சுற்றத்தார்களும் சூழ்ந்து மனம் குழம்பி ஐயையோ' என்று கதறியழும் குரல் கேட்டு தெருவிலுள்ள நூற்றுக் கணக்கான மக்கள் கலகம் நடந்தாற்போல் வந்து சூழ்ந்து கொண்டு கவலையோடு கண்ணீர் வடித்து நிற்கும் காலையில் கைகளில் தண்டாயுதத்தையும், திரிசூலத்தையும் தாங்கி பாசக் கயிற்றை வீச காலனும் வந்து விடுவான், பாவிகள் முன் காலன் பயங்கரமாகத் தோன்றுவான்.

"பல்லது கடித்து மீசை படபடென்றே துடிக்கக்
கல்லினும் வலியநெஞ்சம் காட்டியே உருட்டி நோக்கி
எல்லினும் கரிய மேனி யெமபடர்"

மேலே கண்ட செய்யுளைப் படிப்பதற்கே, நினைப்ப தற்கே சற்று அச்சமாயிருக்கிறதென்றால், அக்காலனை நேரில் சந்திக்கும் துர்ப்பாக்கியம் நேர்ந்துவிட்டால், உள்ளம் எந்த பயங்கர குழப்ப நிலையில் தடுமாறும் என்று சற்றே நினைத்துப் பார்த்தால் இக்சட்டுரை மிகவும் பயன் பெற்றதாக அமையும்.

குழப்ப நிலையில் தடுமாறும் மனம் குமரனை நினைக்க முடியுமா? சிறிது சந்தியுங்கள்; மரணப் போராட்டத்தில் மனம் துடித்துக்கொண்டல்லவா இருக்கும். இளம் வயதிலிருந்தே இறைவன் ஆறுமுகப் பெருமானின் அழகுத் திருவடிகளை, அருளும் திருவடிகளை அன்புடன் நேசித்து பூசித்து பக்தி செய்து வந்தால் காலன் வரும் காலத்தில் காலனுக்கும் காலனுக உகந்து ஆறுமுகப் பெருமான் தனது காவிக் கமலத் திருக் கழல்களைக் காட்டி தடுத்தாட்கொண்டு அருள்பாலிப்பான் என்பதில் ஐயமில்லை.

சூலம் பிடித்து எமபாசம்
சுழற்றித் தொடர்ந்து வரும்
காலன் தனக் கொரு
காலும் அஞ்சேன் கடல் மீதெழுந்த
ஆலம் குடித்த பெருமான் குமாரன்
அறுமுகவன்
வேலும் திருக்கையும் உண்டே
நமக் கொரு மெய்த் துணையே — அருணகிரிநாதர்

———

வாக்கின் மன்னரும் வாதவூரடிகளும்

திரு. கா.கு.சண்முகம் அவர்கள்;
காவலிபாளையம் [அ. நி.]

வாக்கின் மன்னராகிய நாவுக்கரசரும், வாதவூரடிகளாகிய மாணிக்கவாசகரும் சைவசமய குரவர்களுள், மற்றை இருவரினும் அதிக நாட்கள் உயிர் வாழ்ந்தவர்கள். மாணிக்கவாசகர் 32ஆண்டுகளும், நாவுக்கரசர்80 ஆண்டுகளும் இருந்தனர். மணிவாசகர் பாண்டிய மன்னனுலும், நாவுக்கரசர் பல்லவ மன்னனுலும் துன்புறுத்தப்பட்டனர். பின், தங்களின் பெருமையை உலகுக்கு உணர்த்தினுர்கள். நாவுக்கரசர் 4, 5, 6 ஆகிய திருமுறைகளையும், மணிவாசகர் 8ம் திருமுறையையும் அருளிச் செய்தார்கள்.

இருவரும் சிவபெருமானையே பாடிப் பரவினவர்கள். இவர்களுக்குள் வேற்றுமையான கருத்துக்கள் இருப்பதாக யாரும் இயம்ப முடியாது. ஒற்றுமையான கருத்துக்களே உள்ளன அவற்றுள் ஒரு சிலவற்றை மட்டும் ஈண்டு நோக்கி மகிழ்வோம்.

இறைவன் அளவில்லாத பெருமை உடையவன்என்றும் பூவில் வாசனை போல், உலகின் எல்லா இடங்களிலும் உள்ளான் என்றும் வாக்கின் மன்னர் கூறுகிருர்.

''அளவில் பெருமை உடையாய் நீயே பூவினில்
நாற்றமாய் நின்ருய் நீயே'' —திருத்தாண்டகம்.

இதே கருத்தை, வாதவூரடிகளும் திருவாசகத்தின் 2 இடங்களில் எடுத்துரைக்கிருர்.

''அந்தமில் பெருமை அருளுடை அண்ணல்''
—அண்டப்பகுதி.

''பூவில் நாற்றம் போன்று யர்ந்தெங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை
இன்றெனக்கு எளிவந் தருளி'' —அண்டப்பகுதி.

இறைவன் ஒவ்வொரு ஜீவராசியிலும், எண் வகையாய்ப் புணர்ந்து நிற்கிருன் என இருவோரும் இனிது இயம்புகின்றனர்.

"இருநிலனாய்த்தீயாகி நீருமாகி
இயமானனாய் எறியும் காற்றுமாகி
அருநிலைய திங்களாய், ஞாயிறாகி, ஆகாசம்
ஆய், அட்ட மூர்த்தியாகி." -நாவுக்கரசர்.

"புவனம் நீர், தீ, காற்று, இயமானன்
வானம், இருசுடர்க் கடவுளானே" -திருச்சதகம்

இறைவன் அற்புதனாகவும், சொற்களால் அறிவிக்க முடியாதவனாகவும் உள்ளன என நாவுக்கரசர் 6ம் திருமுறையில் பாடியுள்ளார்.

"அற்புதன் காண், சொற்பதமும் கடந்துநின்ற
எம்மான் காண்"

இதே கருத்தை அண்டப் பகுதியில் எடுத்துச் சொல்கிறார் வாதவூரடிகள்,

"அற்புதன் காண்க! அநேகன் காண்க!
சொற்பதம் கடந்த தொல்லோன் காண்க!"

இறைவன் உண்மையானவர்களுக்கு மெய்ப் பொருளாகவும், பொய் பேசுவோர்க்குப் பொய்யனாகவும் உளன் என இருவரும் கூறுவர்.

"மெய்யர் மெய்நின்றவர்க்கு அல்லாதவர்க்கு என்றும்
பொய்யர் புகலூர்ப் புரிசடையாரே" -தேவாரம்.

"பொய்யர் தம்பொய்யனை, மெய்யர் மெய்யை"
-திருப்பொற்சுண்ணம்.

முன் காலத்தில் சிவபெருமான் ஆலமர நிழலின் கீழ் அமர்ந்து முனிவர்களுக்கு அறநெறியைப் போதித்ததாக நாவுக்கரசர் நவின்றுள்ளார்.

"அன்றாலின்கீழ் இருந்தங்கு அறம் சொன்னானை,
அகத்தியனை உகப்பானை,
அயன்மால் தேட நின்றானை" -6ம் திருமுறை.

இதையே மணிவாசகரும் திருவாசகத்தில் பாடியுள்ளார்.

"அன்றால நீழல்கீழ் அருமறைகள் தான்அருளி
நன்றாக வானவர் மாமுனிவர் நாள்தோறும்
நின்றார ஏத்தும் நிறைகழலோன்" -திருப்பூவல்லி.

சிவபெருமானை அல்லாது வேறுதெய்வங்களை இருவோரும் பாடிப் பரவவில்லை,

''சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்''
—மறுமாற்றத் திருத்தாண்டகம்.

''உள்ளேன் பிறதெய்வம் உன்னை அல்லாது
எங்கள் உத்தமனே'' —திருச்சதகம்.

அவ்விருவரும் நமனை அஞ்சவோ, நரகத்தில் இடர்ப்படவோ இல்லை

''நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்,
நரகத்தில் இடர்ப்படோம், நடலை இல்லோம்,
ஏமாப்போம், பிணியறியோம், பணிவோம் அல்லோம்,
இன்பமே எந்நாளும்', —மறுமாற்றத் திருத்தாண்டகம்.

''யாமார்க்கும் குடியல்லோம் யாதும் அஞ்சோம்,
மேவினோம் அவன் அடியார் அடியாரொடும்
மேன்மேலும் குடைந்தாடி ஆடுவோமே'' —திருச்சதகம்.

தன்னை வணங்குவார், பிணி முதலிய துன்பங்களை நீக்கி அருள் புரிவன் சிவன் என இருவோரும் செப்புவர்.

''ஒழித்திடுமே உள்குவார் உள்ளத்துள்ள
உறுபிணியும், செறுபகையும்'' —நாவுக்கரசர்.

''பணிவார் பிணிதீர்த்தருளிப் பழைய அடியார்க்குன்
அணியார் பாதம் கொடுத்தி'' —மணிவாசகர்.

ஈசனை அடைந்தோர்க்கு எந்தக் குறையும் இல்லை என்பர் இருவரும்.

''புகலூர்க் கோனைப் பிரானைக் குறுகக்
குறுகா கொடு வினையே'' —5ம் திருமுறை.

''குணங்கள் தாம்இல்லா இன்பமே, உன்னைக்
குறுகினேற்கு இனிஎன்ன குறையே'' —கோயில் திருப்பதிகம்.

குற்றாலத்தில் உறையும் கூத்தனாகிய இறைவனையே, இருவோரும் உற்றார் என எண்ணினர்.

''உற்றார் ஆருளரோ—உயிர் கொண்டு போம்பொழுது
குற்றாலத்துறை கூத்தன் அல்லால் நமக்கு உற்றார்ஆருளரோ?''
—தேவாரம்.

''உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன், பேர்வேண்டேன்,
கற்றாரை யான்வேண்டேன், கற்பனவும் இனிஅமையும்,

குற்ருலத்து அமர்ந்துறையும் கூத்தா, உன்குரை கழல்கே,
கன்ருவின் மனம்போலக் கசிந்து உருகவேண்டுவனே''
-திருவாசகம்.

''அறிவில்லாதவனுகிய என்னுடைய உள்ளத்தே, இறைவன் எழுந்தருளப் பெற்று; நல்லது, கெட்டதுகளை காட்டினுர்'' என நாவுக்கரசர் பாடியுள்ளார். அவ்வாறே வாதவூரடிகளும் கூறியுள்ளார்.

''நானேதும் அறியாமே என்னுள் வந்து
நல்லனவும் தீயனவும் காட்டநின்ருய்'' -6ம் திருமுறை

''அறிவிலாத எனைப்புகுந்து ஆண்டுகொண்டுஅறிவதைஅருளி மேல்
நெறியெலாம் புலம்ஆக்கிய எந்தை'' -திருச்சதகம்.

இறையனை இளமைக் காலத்திலேயேநினையாது வீண்பொழுது கழித்ததற்காக இருவருமே வருந்துகின்றனர்.

''முன்னமே நினையாது ஒழிந்தேன் உனை
இன்னம் நான் உன்சேவடி ஏத்திலேன்'' -திருக்குறுந்தொகை.
''ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலமெல்லாம்
பாழுக்கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே''
—திருத்தோணேக்கம்.

குடும்ப பாரம் என்னும் சிக்கலில் சிக்கி, ஈசன் பெருமையை அறியாமலும், தவநெறி மேற்கொள்ளாமலும் இருந்தற்காக வருந்துகிருர் நாவுக்கரசர்

''மக்களே மணந்ததாரம் அவ்வயிற்றவரை ஓம்பும்
சிக்குளே அழுந்தி ஈசன்திறம்படேன் தவம்அது ஓரேன்''
—திருக்குறுந்தொகை.

தவம் செய்யாததற்காகவும், மலரிட்டு இறைஞ்சாததற்காகவும் மணிவாசகரும் மனம் வருந்துகிருர்.

''தவமே புரிந்திலன் தண்மலரிட்டு முட்டாது இறைஞ்சேன்
அவமே புரிந்த அருவினையேன்'' —திருச்சதகம்.

ஐம்புல ஆசை என்னும் தீய அரக்கரால். மனமானது மத்தேறிய தயிர் போல் கலக்குண்டு மயங்கியதாக இறைவனிடம் விண்ணப்பிக்கிருர் வாகீசர். இதே கருத்தை வாதவூரடிகளும் 'நீத்தல் விண்ணப்பம்' என்னும் பகுதியில் எடுத்துரைக்கிருர்,

''சித்தத்துள் ஐவர்தீய செய்வினை பலவும் செய்ய
மத்துறு தயிரே போல மறுகுமென் உள்ளம் தானும்''
-தேவாரம்

''மத்துறு தண்தயிரில் புலன்தீக்கதுவக் கலங்கி
வித்துறுவேனை விடுதி கண்டாய்'' –நீத்தல்விண்ணப்பம்.

“அழுக்கு உடலைப் பொய் என்று எண்ணாமல், மெய் என்று எண்ணி, நீதி அறியாமல் தீ நெறிகளில் சென்றேன்'' என்று சொல்லி வருந்துகிறார், வாகீசர்.

''பொறியிலா அழுக்கை ஓம்பிப்
பொய்யினை மெய்யென் றெண்ணி
நெறியலா நெறிகள் சென்றேன்
நீதனே நீதி ஓதும்
அறிவிலேன் அமரர் கோவே''

இதே கருத்தை மணிவாசகர், திருவாசகத்தின் அச்சோப்பதிகத்திலும், அதிசயப் பத்து பதிகத்திலும் கூறி வருந்துகிறார்.

''நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனை''
–அச்சோப்பதிகம்.

''நீதியாவன யாவையும் நினைக்கிலேன்
நினைப்பவ ரொடும் கூடேன் ஏதமே பிறந்தேன்''
–அதிசயப்பத்து.

இதுபோல் இன்னும் எத்தனையோ ஒப்புமையான கருத்துக்களை எடுத்துரைக்கலாம். விரிவஞ்சி இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

—★—

இலக்கிய இன்பம்

திரு. இரா. ம. கருப்பன் செட்டி அவர்கள்,
14. பட்டாபிராமபிள்ளைதெரு, தென்னூர்,
திருச்சி-620017

-O-

உயர்தனிச் செம்மொழியாகிய நம் செந்தமிழ் மொழிக்கண் ஈராயிரம் ஆண்டுகட்கும் முற்பட்ட பழமையான இலக்கியங்கள் பல உள்ளன. இற்றை நாளில் அவற்றைப் படித்து இன்புறும் மாணாக்கர்கள் இருபது சதவிகிதத்தினர் என்று பகர்வது சற்று கடினமாகவே உள்ளது. சொற்சுவை, பொருட்சுவை பொருந்த அமைக்கப்பெற்ற எத்தனையோ இலக்கியங்கள் தமிழகத்தின் கண் இன்றும் உள்ளன. சிலப்பு, மேகலை, சிந்தாமணி, தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்விய பிரபந்தம் என்று எண்ணிலடங்கா தாரகைகள் போல அவை விரிந்து பரந்துள்ளன. இத்தகைய இலக்கியங்களில் இன்பம் எய்த இயலும் என்பதை உறுதிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திருவாசகத்தில் மணிவாசகர்:-

பகர்ந்துள்ள ஒரு கூற்றைத் திரும்பத் திரும்பப் பகர்வது நூல் அமைப்புக்கு ஒவ்வாது. மற்றுவாதவூரரோ இதே பிழைக்குப் பல தடவை இலக்கு ஆகிறார். நூல் அமைப்புக்காக அவர் எடுத்துக்கொண்ட விஷயங்களைப் பாகுபடுத்தி அவர் பாடவில்லை. அவர் தம் உள்ளத்தை ஓவாது உருக்கினார். உருக்கிய ஒவ்வோர் முறையும் சொல் ஓவியம் உருவெடுத்தது. தமது உள்ளங்களை உருக்க முயலுகின்ற ஆத்ம சாதகர்கள் ஆயிரந்தடவை அதே கருத்துக்களைத் தங்களிடத்துக் கிளப்பினாலும் புதிய புதிய சுவை காண்பர். அருள் துறையில் ஒரே கருத்தைச் சொல்லிச் சொல்லிச் சிந்தை உருகுமளவு அதனிடத்தில் தெய்வீகம் திகழும் சொல்லழகு, பொருளழகு ஆகிய இரண்டு அழகும் சேர்ந்து அமைவது நல்ல கவிதை இந்த இரட்டை அழகு திருவாசகத்தில் உச்சஸ்தானம் பெறுகிறது. தில்லையில் அருளிய திருச்சாழலில் சிவனுடைய காருண்ணியம் குறித்து மணிவாசகர் கூறுகிறார்.

மலைமகளை யொருபாகம்
வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தா லவன்சடையிற்
பாயுமது வென்னேடி
சலமுகத்தா லவன்சடையிற்
பாய்ந்திலளேற் றரணியெல்லாம்
பில முகத்தே புகப்பாய்ந்து
பெருங்கேடாஞ் சாழலோ.

சிவமும் சக்தியும் ஒன்று. அந்த ஒரே பராசக்தி பிரபஞ்ச நடைமுறையில் பல சக்திகளாகப் பரிணமிக்கிறது. கங்காநதியும் அத்தகைய சக்திகளுள் ஒன்ருகும். "இமயமலையரசன் புதல்வியாகிய உமாதேவியை தனது திருமேனியின் ஒரு பகுதியில் வைத்ததும் இறைவனது மற்றொரு சக்தி நீர் வாயிலாக அவன் சடையின்கண் சென்று பொருந்தியது. நீர் வாயிலாக இறைவன் சடையில் ஓடி விழுந்திடா விடின் நில உலகெலாம் அவள் வேகத்தில் பட்டு பாதாளத்திலே அழுந்தி வீழ்ந்து விடப் பெரிய கெடுதி ஏற்பட்டுவிடும். ஆகவே அவ்வாறு பொருந்தியது" என்பது பாடலின் கருத்து. வாதவூரர், "கங்கையானவள் பூலோகம் பாதாளத்தில் சென்று விடாதிருக்க இறைவனுர் திருமுடியில் அமர்ந்தாள் என்று பொருள் படும்படியும் மகேசுவரியின் மேல் கொண்ட அழுக்காறு காரணமாக செம்மான் மேனியன் தலையில் அமர்ந்தாள் என்று பொருள்படும் படியும் பாடியுள்ளார். மறைமுகமாக 'சக்களத்திப் போராட்டத்'தை நினைவுறுத்துகிருர். இரண்டாவதாகக் கூறப்பட்டது நகைப்புச் சுவையை உருவாக்கும்.

பிரபந்தத்தில் பெரியாழ்வார்:-

பகவானுடைய அனுக்கிரகம் பெற வேண்டுமென்று எண்ணிய கோபிகா ஸ்த்ரீகள் பகவானை நோக்கித் தினந்தோறும் தியானத்தில் ஈடுபடுவாராயினர். பகவானும் தியானத்திற்கு இசைந்து யமுனைநதி தீரத்தில் ஒரு மணற்குன்றின் மேல் அமர்ந்து குழலூதுகிருர் அப்போது நடக்கும் செயல்களைபத்துப் பாசுரங்களில் பெரியாழ்வார் விளக்குகிருர். அவற்றுள் ஒன்று.

திரண்டெழு தழைமழை முகில்வண்ணன்
செங்கமல மலர்சூழ் வண்டினம்போல
சுருண்டிருண்ட குழல் தாழ்ந்த
முகத்தால் ஊதுகின்ற குழலோசை வழியே மருண்டு

மான் கணங்கள் மேய்கை மறந்து
மேய்ந்த புல்லும் கடைவாய் வழிசோர
இரண்டுபாடும் துலுங்காப் புடைபெயரா
எழுது சித்திரங்கள் போல் நின்றனவே.

மழை வழங்கும் கருமையான முகிலின் நிறம் பெற்ற கண்ணன், சிவந்த தாமரை மலரைச் சுற்றி ரீங்காரமிடும் வண்டுதள் போல சுருண்டிருந்த மூடி காற்றில் பறக்கதாழ்ந்த முகத்தோடு நாதப்ரம்ஹம் வாய்ந்த குழலை இசைக்கிருன். அந்தக் குழலில் இருந்து வெளிப்பட்ட இனிய நாதத்தால் தடுமாற்றமடைந்து மான் இனங்கள் மேய்கையை மறந்து இசை வந்த வழியைப் பார்வையிட்ட வண்ணம் மயங்கி நின்றன. அதுவரை அவைவாயிலடக்கி அரைத்த புல்லும் கடைவாய் வழியே வெளிவரும் வண்ணம் தீட்டப்பெற்ற சிறப்பான ஓவியங்கள் போல அசைவில்லாது நின்றன.'' என்பது பாடலின் கருத்து: இதன் மூலம் இசை இன்பத்தைப் பெற இயலும், இப்பாடலில் தமிழ் இசையின் பெருமையைப் பெரியாழ்வார் அழகுற விளக்கியுள்ளார். இப்பாடலைக் காணும் பொழுது நாமே நேரில் குழலோசையில் மயக்குண்டதுபோல் ஓர் உணர்வு பிறக்கிறதல்லவா?

பெரியபுராணத்தில் சேக்கிழார்:-

திருவாரூரை நேர்மை மாருது ஆண்டு வந்தவன் மனுநீதிச் சோழனுவான்: அவன் மைந்தன் வீதிவிடங்கன் ஒரு நாள் இராசவீதியில் தேரில் செல்லும்போது கன்றுக்குட்டி ஒன்று பருதியின் இடையே அகப்பட்டு உயிர்நீத்தது அறிந்த தாய்ப்பசு அரண்மனை வாயிலையடைந்து அங்கு இருந்த மணியினைத் தன் நாவினுல் அசைத்து ஒலி எழுப்பிற்று. அதைச் சேக்கிழார் குறிப்பிடுகிருர்:-

பழிப்பறை முழக்கோ ஆர்க்கும்
பாவத்தின் ஒலியோ வேந்தன்
வழித்திரு மைந்தன ஆவி
கொளவரும் மறலி ஊர்திக்
கழுத்தணி மணியின் ஞர்ப்போ
என்னத்தன் கடைமுன் கேளாத்
தெழித்தெழும் ஓசை மனனன்
செவிப்புலம் புக்க போது!

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

திருமுறையும் நம்பியாண்டார் நம்பியும்

திரு, பொ. திருஞானசம்பந்தம் அவர்கள்,
செஞ்சி

—★—

திருமுறையென்றும் இப்பெயர் வழக்கினை "திருமுறை யெழுதுவோர் வாசிப்போர்" எனக் கணநாத நாயனார் புராணத்தில் சேக்கிழார் சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார். எல்லாம் வல்ல இறைவனை இபலிசைத் தமிழ்ப் பாடல்களால் உளமுருகிப் போற்று முகத்தால் அப்பெருமானை அடைந்து இன்புறுதற்குரிய எளிய வழியினை உலகிற்கு அறிவுறுத்திய பெரியோர் தேவார ஆசிரியர்களே ஆவர் "ஆறதேறுஞ்சடையான் அருள்மேவ அவனியர்க்கு வீறதேறுந் தமிழால் வழி கண்டவன்" என்று திருஞானசம்பந்தப் பெருமானைப் பாராட்டிய நம்பியாண்டார்நம்பி, ஞானசம்பந்தப்பிள்ளையார் திருப்பதிக வாயிலாக உலகினர்க்கு அறிவுறுத்திய சமய நெறியினைப் 'பதிகப் பெருவழி'யெனச் சிறப்பித்துப் போற்றியுள்ளார். முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானது பெருங் கீர்த்தியும் அப்பெருமான் தன்னடியார்க்கு அருள் வழங்குந் திறமும், சரியை, கிரியை, யோகம், ஞானம், என நால்வகையாக நிகழும் திருத்தொண்டுகளின் இயல்பும், எல்லாவுயிர்களையும் உய்வித்தல் கருதி உடல், கருவி, உலகு, நுகர்

(முன் பக்கத் தொடர்ச்சி)

"மணியினோசை மனுவேந்தனின் பழிப்பறை முழக்கைப் போன்றும், பாவ ஒலியைப் போன்றும் கூற்றுவன் ஏறி வரும் வாகனக் கழுத்தணி ஒலி போலும் பெரு முழக்கிட்டது', என்று சேக்கிழார் வருணிப்பது அவலச்சுவையூட்டுகிறது.

இவை போன்ற எத்தனையோ சுவைகள் இலக்கியத்தில் உண்டு. அவற்றைச் சொல்லால் வருணிக்க இயலாது. படித்துப் பார்த்துப் பொருள் உணர்ந்து இன்புறுவதே சிறப்பு இலக்கியக் கருவூலங்களை இடையறாது கற்றுணர்ந்து இன்புறுவோமாக!

பொருள் என்பவற்றின் உருவாக இறைவனுற் படைத்தளிக்கப் பெறும் இவ்வுலகியற் பொருள்களின் எழில் நலங்களும் ஆகிய பலவகைப் பொருள்களையும் தொகுத்துரைப்பன இத்திருப்பாடல்களாதலின் இவை பதிகம் எனப் பெயர் பெறுவன ஆயின.

தேவாரத் திருப்பதிகங்களை ஏட்டில் எழுதித் தொகுத்து முறைப்படுத்திய பின்புதான் அவற்றுக்குத் திருமுறையென்ற பெயர் வழங்கியிருத்தல் வேண்டும். சேக்கிழார் இத்திருப் பதிகங்களைத் திருமுறையென்ற பெயராற் குறித்துப் போற்றுதலை எண்ணுங்கால் அவர்க்கு நெடுங் காலத்திற்கு முன்பே இத்தெய்வப் பாடல்கள் முறைப் படுத்தப் பெற்றிருந்தன வென்பது நன்கு புலனும்.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டு என வழங்கும் வழக்கம் பன்னிரண்டாந் திருமுறையாகிய திருத்தொண்டர் புராணம் இயற்றப் பெற்ற பின்னரே ஏற்பட்ட தென்பது உமாபதி சிவாசாரியார் இயற்றிய சேக்கிழார் புராணத்தால் நன்குத் துணியப்படும் நம்பியாண்டார் நம்பியின் உதவி பெற்றுத் தேவாரத் திருமுறைகளைத் தில்லைத் திருக்கோயிலிற் கண்டு வெளிப்படுத்திய சோழ மன்னனை "திருமுறை கண்ட சோழன்" எனப்போற்றுவர். அவ்வேந்தர் பெருமானது நன் முயற்சியால் சைவத்திருமுறைகள் தேடித் தொகுக்கப்பெற்ற வரலாற்றை விரித்து கூறும் நூல் திருமுறை கண்ட புராண மாகும். இதனை இயற்றியவர் சைவசித்தாந்த சந்தானுசிரியர் நால்வருள் ஒருவராகிய கொற்றவன் குடி உமாபதி சிவாச்சாரியரென்பது தொன்று தொட்டு வழங்கிவருஞ் செவிவழிச் செய்தியாகும். திருமுறைகண்ட புராணம் நாற்பத்தைந்து செய்யுட்களையுடையது. இந்நூலிற் கூறப்பட்ட வரலாற்றை ஆராய்வோம்.

காவிரி பாயும் சோழ வளநாட்டிலே திருவாரூரிலே தியாகராசப் பெருமானை வழிபட்டு வரும், அபய குலசேகரன் என்னும் சிறப்புப் பெயருடைய இராசராச சோழன், சோழ நாட்டை ஆட்சிபுரிந்து வந்தான். அந்நாளிலே அவனது அவைக்களத்திலே எழுந்தருளிவருஞ் சிவனடியார்கள், மூவர்

பாடிய தேவாரப் பதிகங்களுள் தமக்கு தெரிந்த ஒவ்வொரு திருப்பதிகத்தையே ஓதக்கேட்டுத் தேனினும்மினிய தேவாரப் பதிகங்களின் திருவருள் நலத்தில் திளைத்த வேந்தன் மூவர் பாடிய தேவாரத் திருப்பதிகங்களெல்லாவற்றையும் தேடிக் கண்டு ஒரு சேரத்தொகும் முயற்சியில் ஈடுபட்டகன், தேவாரத் திருப்பதிகங்களை எங்கும் தேடியும் அவை முழுவதுங் கிடைக்கவில்லை. அதனால் சோழ மன்னன் பெரிதும் வருந்தினான்.

திருநாரையூரிற் பொல்லாப் பிள்ளையார்க்குப் பூசனை புரியும் ஆதிசைவ குடும்பத்தில் சைவசமயம் வாழ ஒரு நற் புதல்வராக பிறந்தருளினார்நம்பி. வளமர்க உபநயனச் சடங்கு பூண்டார். தந்தை ஒரு நாள் வெளியூர்க்குச் செல்லவே, மைந்தர் பொல்லாப் பிள்ளையாரை ஆராதிக்க ஏகினார். உளம் நிறைந்த அன்போடு உயர் மஞ்சனம் முதலாக உரியன வெல்லாம் வைத்து நிவேதனம் முன் வைத்து "எம்பெருமான் அமுது செய்ய வேண்டும்" என்று இறைஞ்சியும், அமுது செய்யாதிருப்பக் கண்டார். 'ஏதேனும் தவறு இங்கு உண்டோ? அடியேன் நிவேதிட்ட அமுதம் உண்ணாதது என்னை? என்று வருந்தி தலையை மோதப் புகுந்தார். அப்பொழுது "நம்பி பொறு" என்று பிள்ளையார் தடுத்து அமுதமெல்லாம் நன்கு அருந்தினார். நம்பி எந்தையே இனிஅடியேன் பள்ளிக்கு ஏகினால் ஆசிரியர் அடிப்பார். ஆதலால் மறைமுதற் கலைகளெல்லாம் நீயே ஓதித்தல் வேண்டும் என்று வேண்ட வேழ முகத்தோனும் ஓதுவித்தான் இங்ஙனம் பொல்லாப் பிள்ளையாரால் ஆட்கொள்ளப் பெற்றமையால் அவ்விளைஞர் நம்பியாண்டார்நம்பியென அழைக்கப்பெற்றுத் திருவிரட்டை மணிமாலையென்னும் தமிழ்ப் பிரபந்தம் போற்றிப் பரவினார்.

திருநாரையூரில் நிகழ்ந்த இத்திருவருட் செய்தி தமிழ் நாடெங்கும் பரவியது. இதனை கேட்டு சோழ வேந்தன் கண்ணுதலான பெற்ற கடக்களிற்றிற்கு நம்பி நிவேதிக்கும் பொருட்டுக் கணக்கற்ற வாழைகனிகளும், தேனும், அவலும், அப்பமும், எள்ளுருண்டையும் எடுத்துக்கொண்டு கடலனைய சேனையுடன் நாரையூரை அடைந்தான். படையலுக்கும்

படைக்கும் நாரையூரில் இடம் போதாமையால் அவை பத்துக்காத அகல எல்லையில் பரவி நின்றன. மறையவர் தாளைப் பணிந்து மன்னவன் "ஈங்கிதனைப் பொல்லாத பிள்ளை யார்க்கு இப்பொழுதே நிவேதிக்க வேண்டி நின்றான். நம்பி நன்று உனதுபணி" என்று கருதித் தும்பிமுகன் அடிவணங்கி அமுதுசெய்யுமாறு வேண்டினான். அவனும் அருள்செய்தான் தும்பிக்கை புறப்படவே படைத்தனவெல்லாம் புகுந்த இடம் அறியாமற் போயின.

அது கண்டு மன்னன் மகிழ்ந்து நம்பியை வணங்கி "வேதியனே சமய குரவர் மூவர் அருளிசெய்த தேவாரத்திரு முறைகளும் திருத்தொண்டர் வரலாறும் இந்நிலவுலகத்தில் விளக்கம் பெறுதல் வேண்டும் என வேண்டிக் கொண்டான். வேந்தனது வேண்டுகோளில் அமைந்த அன்பின் திறத்தை யுணர்ந்த நம்பியாண்டார் நம்பி பொல்லாப் பிள்ளையாரை இறைஞ்சி நின்று மூவர் தமிழ் இருந்த எல்லையும் திருத் தொண்டர்இயல்பும் அருளுமாறு வேண்டினார். பிள்ளையாரும் "வண்டமிழ்கள் இருந்த இடம் மன்றுளாடும் மகேசன் புறக் கடையின் பாங்கர்க் கைகள் அடையாளமாகச் சார்ந்தன" என்றருளித் தொண்டர் பேறும் சாற்றினார். இறைவன் அருளிய செய்தியையும் மறையின் பெருமையினையும் நம்பி மன்னனுக்குச் சொல்லி "ஆராய்ந்து தருக" என்றார்.

அருளுரையாகிய அதனைக் கேட்டு மகிழ்ந்த நம்பியும், அபய குலசேகரனும் தில்லையையடைந்து அந்தணரிடம் கணபதி தன் சொல் இது என நவின்றான், அவர்கள் தமிழ் வைத்த மூவர் வந்தால் அறை திறக்கும் "என உரைத்தனர் அரசனும் அம்பலவர்க்கு விழாவெடுத்துத் தமிழ்மூவர் தம்மை உலா வருவித்து கோயில்வலமாக்கி உள்ளே தமிழிருக்கையிற் கொண்டு சேர்த்து அவர் சேர்ந்தார்" எனச் செப்பினான். மூவர் தம் செங்கையே இலச்சினையாய் இருந்த காப்பினைக் கண்டு மறையோர் அதிசயித்துக் கடைவாய் நீக்கினர். போத மிகும் பாடல்களைப் புற்று மூடியிருப்பக் கண்ட புரவலன் மனம் நொந்தான். பண்மலையைத் தள்ளி எண்ணெய்க் குடங் கொண்டு, செல்லு நனையச் சொரிந்து, திருஏடெல்லாம்

எடுத்து நோக்கிய போது, அலகிலா ஏடுபழுதாகக் கண்டு அகந்தளர்ந்து கண்ணீர் அருவி பொழிய நின்றான். மலைமகள் கொழுநன் அருளால் "பண்மூடச் செய்தே ஈண்டு வேண்டுவன வைத்தோம்" என வானகத்தில் ஓரொலி எழுந்தது. மன்னன் ஆடினான்; பாடினான்; நெஞ்சம் தேறினான்; நம்பியின் திருவடியை வணங்கினான்; சிவனடியார் கொள்க எனப் பண்டாரம் திறந்து விட்டான் களிகொண்ட மன்னன் எழில் முறையை முன்போல வகுக்க எண்ணினான். காழிவேந்தர் முறை ஒரு மூன்றும், வாகீசர் முறை ஒரு மூன்றும், ஆரூரர் முறை ஒன்றும் பொருந்த வகை ஏழாகத் தொகுத்துச் செய்தான்.

இவ்வாறு தேவாரத் திருப்பதிகங்களை ஏழு திருமுறைகளாக வகுத்த பின்பு மாணிக்கவாசகர் அருளிச் செய்த திருவாசகம், திருக்கோவையார் என்னும் இரண்டு நூல்களையும் எட்டாந் திருமுறையாகவும், திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பி காடவநம்பி, கண்டராதித்தர், வேணாட்டிகள், திருவாலியமுதர், புருடோத்மநம்பி, சேதிராயர் என்னும் ஒன்பதிமர் பாடிய திருவிசைப்பாப் பதிகங்கள் இருபத்தெட்டும், அவருள் சேந்தனார் பாடிய திருப்பல்லாண்டாகிய பதிகம் ஒன்றும் ஆக இருபத்தொண்பது பதிகங்களையும் ஒன்பதாந் திருமுறையாகவும், திருமூலநாயனார் அருளிச் செய்த திருமந்திரப் பாடல்களை பத்தாந் திருமுறையாகவும் திருவாலவாயுடையார் திருமுகப்பாசுரம் முதலிய பிரபந்தங்களை பதினோராந் திருமுறையாகவும் வகுத்தருளினார்.

இங்ஙனம் திருமுறைகள் வகுத்த நம்பி தமக்குப் பொல்லாப் பிள்ளையார் உபதேசித்தருளிய வண்ணம் திருத்தொண்டத் தொகையை முதனூலாகக் கொண்டு தனியடியார் அறுபத்து மூவரும் திருக்கூட்டத்தாராகிய ஒன்பது தொகையடியார்களும் ஆகியதிருத்தொண்டர்களின் தொண்டுகளையும் அத்தொண்டுகளால் அவர்கள் பெற்ற பேறுகளையும்கட்டளைக் கலித்துறையாப்பினால் அந்தாதியாக அருளிச் செய்தார். பின்னர் திருஞானசம்பந்தர் மீது திருவந்தாதி, திருசண்பை விருத்தம், மும்மணிக்கோவை, திருவுலாமாலை, திருக்கலம்

பகம், திருத்தொகை என்னும் ஆறு பிரபந்தங்களையும், நாவுக்கரசர் மீது திருவேகாதாசமாலை என்னும் பிரபந்தத்தையும் இயற்றி மன்னனது விருப்பிற்கிணங்கத் தாம் பாடிய இப்பிரபந்தங்களையும் பதினொராந் திருமுறையிலே சேர்த்தருளினார்.

தேவாரத் திருப்பதிகங்களுக்குரிய பண் முறையினைத் தெரிந்து இசையமைக்க மன்னனும் நம்பியும் விரும்பி திருநீலகண்ட யாழ்பாணர் பிறந்தருளிய திருவெருக்கத்தம் புலியூரை அடைந்து, இறைவனை வணங்கி தேவார திருப்பதிகங்களுக்குரிய இன்னிசையினை எங்களுக்கு உணர்த்தியருள வேண்டினர், அங்கிலேயில் திருநீலகண்ட பெரும்பாணர் மரபிலே பிறந்த பெண்ணொருத்திக்கு இசைத் திறனையளித்துள்ளோம் என்று அருள்வாக்கு தோன்றியது பின்னர் அவ்வம்மையாரை தில்லைக்கு அழைத்துச் சென்று தேவாரப்பாடல்களுக்குரிய பண்களை அமைக்கப்பட்டது இறைவன் அருள் கொண்டு அம்மையார்வகுத்த இசைமரபே தேவாரத் திருப்பதிகங்களுக்கு பொருந்திய இசையாகத் தென்னாட்டிற் சிறப்புற்று வளர்வதாயிற்று இவ்வாறு திருமுறைகண்ட புராணம் கூறுகிறது. இப்புராணம் கூறும் வரலாற்றில் சில நிகழ்ச்சிகள் ஆராய்தற்குரியன.

நம்பியின் பெற்றோர் பெயர் திருமுறைகண்ட புராணத்திற் காணப்பட்டில. இவர் தம் தந்தை பெயர் அனந்தேசன் என்பதும் தாய் பெயர் கலியாணி என்பதும் திருநாரையூர்த் தல புராணத்தால் அறியப்படுகின்றன, நம்பியின் பாட்டனாராகிய சந்திரசேகரனுக்கு நம்பி என்னும் சிறப்புப் பெயர் உண்டென்றும் அப்பாட்டனார் பொல்லாப் பிள்ளையாரிடம் பெரிதும் ஈடுபட்டிருந்தமையாலேயே இவரும் பேரன்பு வைத்தார் என்றும் நாரையூர்த் தலபுராணம் கூறுகிறது.

திருமுறை கண்ட புராணத்துள் மூவர் தமிழ் கூத்தப்பிரான் மன்றின் புறக்கடையில் இருந்தனவாகக் குறிக்கப்படுகின்றன. திருநாரையூர்த் தலபுராணம் ''சிதம்பரத்தில் சிற்சபைக்குப் பக்கத்திலுள்ள அறையில் தேவாரத்திருமுறைகள் இருந்தன என்று கூறுகிறது. ஏழாம் நூற்றாண்டினராய சம்பந்தர் அப்பர் எட்டாம் நூற்றாண்டினராய் சுந்தரர் ஆகிய மூவரின்'' திருமுறைகள் யாரால் எப்பொழுது தில்லையில் சேர்க்கப் பட்டன என்பது கண்டறியக் கூடவில்லை.

அலங்கார நாயகன்

திரு. ஸ்ரீ பார்வதி அம்மாள்,
தமிழாசிரியை, நாமக்கல்.

1. முருகன் அருள்

அருட்பெரும் கருணை வள்ளலான நாமகிரிசல வேலவனின் துணை கொண்டு அருணகிரிப் பெருமானின் அலங்காரப் பாடல்களின் மணம் கமழும் சொல் ஓவியங்களை உங்கள் முன் படைக்கின்றேன். கண்ணனையும், முருகனையும் குழந்தைகளாகவே நம் நாட்டில் வணங்கி வருகிறோம். "குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே" என்பது பழமொழி. அருணகிரிநாதர் "அச்சிறு முருகனே" என்றும், குழந்தை முருகேசனுடை என்றும் குறிப்பிட்டிருக்கிறார். குழந்தை கேட்டதெல்லாம் கொடுக்கும்,

மலைகளில் சிறந்தது இமயமலை, நீரில் சிறந்தது கங்கை. மலர்களில் சிறந்தது தாமரை, மணிகளில் சிறந்தது உருத்திராட்சம், பெண்களில் சிறந்தவர் உமாதேவி. குமாரர்களில் சிறந்தவர் குமரப்பெருமான். சமயங்களில் சிறந்தது சைவ சமயம்" சிவ பரம்பொருளின் தொன்மை வடிவு, ஆறுமுக வடிவம். தொன்மையும் நன்மையும் உடைய இந்த வடிவம் அநாதியானது.

இறைவனுடைய திருமுகங்கள் ஐந்து. ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் என்பன. இவை முறையே ஆகாயம் கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு என ஐந்து திசைகளை நோக்கியுள்ளன. இந்த ஐந்து முகங்களுடன் கீழ் நோக்கும் அதோமுகமும் சேர்ந்து ஆறுமுகம் ஆகி சிவம் உயிர்கட்கு தனிப்பெரும் கருணை புரிகின்றது.

"ஐந்து முகத்தோ டதோ முகமும் தந்து
திரு முகங்கள் ஆறாகி"

—கந்தர் சஷ்டிவெண்பா

இத்தகைய கந்தவேளின் இன்னருள் பெற்றோர் பலர். இவர்களுள் முருகவேள் மலர்வாக்கால் பிரணவ மந்திர உப

தேசம் பெற்றவர்கள் இருவரே, ஒருவர் அகத்தியர், மற்றவர் அருணகிரிநாதர். முருகப்பெருமானுடைய முழு முதற் தன்மையை உணர்ந்த பெருமான் அருணகிரிநாதர், இவர் அருணையம் பதியிலே 15ஆம் நூற்றுண்டில் பிரபுட தேவன் காலத்தில் சிவஞான பானுவாய் அவதரித்தவர்- சைவ சமயக் குரவர் நால்வருக்குப் பின் ஐந்தாவது குரவர் எனச் சான்றேர்களால் போற்றப்பட்டவர். அருணகிரியார் அருளிச்செய்த நூல்கள் ஆறு, திருப்புகழ், திருவகுப்பு, கந்தர் அந்தாதி, கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி வேல், மயில் விருத்தம், என்பன

அருணகிரியார் சமரச இயல்புடையவர். அவர் பாடல்களில் எல்லாத் தெய்வங்களும் போற்றப் பெறுகின்றன. சாதன வகைகளாகிய, சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கைப் பற்றிய செய்திகளும். வடதென்மொழி இணைப்பு, பழமை, புதுமை, இயல் இசை, சைவ வைணவம் யோகஞானம். உலகியல் பதியியல் இணைப்பு முதலியன, அருணகிரியாரின் திருவாக்கில் ஒளிவிடும்.

இறைவன் திருவடிகளை அடைந்ததனுல் உண்டாகும் இன்பத்தைப் பாட்டாகப் பாடுகிருர் அருணகிரியார் அந்த இன்பத்தை நினைத்து வியப்பில் ஆழ்கிருர், உலகத்திலே உள்ள உயிர்கள் எல்லாம் மலத்திலே அழுந்தியிருக்கின்றன, மலம் நீங்க வேண்டுமானுல் ஆண்டவனைப் பற்றிக்கொள்ள வேண்டும். மலத்திலிருந்து விடுபட்ட ஒருவன் நான் இவ்வாறு விடுபட்டேன் என்று சொன்னுல் அந்த இன்ப அனுபவம் நமக்கு வழிகாட்டியாக இருக்கும். இந்த வழிகாட்டி நிலையில் இருக்கின்றது அருணகிரியார் வாக்கு. உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் பல பொருட்களின் மீது வைத்திருக்கின்ற பாசந் தான் பெரிய பற்று இந்தப் பற்றே இன்ப துன்பத்திற்குக் காரணமாக அமைகின்றது. இந்தப் பற்றை நழுவச் செய்ய மற்ருெரு பற்றைப் போட வேண்டும்.

> "பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப்
> பற்றுக பற்று விடற்கு"

என்ருர் திருவள்ளுவர்,

பாசமாகிய சேற்றில் அழுந்திக் கிடக்கின்ற உயிர்களுக்கு அதிலிருந்து விடுபட்டு வெளிவருவதற்கு பற்றுக்கோடாக இருக்கின்ற தன் நிலையை அறிவிப்பதற்கு கந்தன் என்ற பெயரோடு காட்சி அளிக்கிருன் இறைவன், கந்தன் என்பதற்கு இணைப்பை உடையவன் என்பது பொருள். ஆறு வேறு தனிக் குழந்தைசளாக இருந்த முருகனை உமாதேவி தன் திருக் கரங்களால் ஒரு சேர அணைத்து எடுத்தாள். அந்த அணைப்பிலே இணைப்பும் உண்டாயிற்று. ஆறு குழந்தைகளும் ஒன்ருகி ஆறுமுகமும் பனிரண்டுகரங்களும் உடையவனுக முருகன் தோன்றினன்;

கடவுளுக்கு அலங்காரம் பண்ணுவதே நம் கண்கள் அந்தத் திரு உருவத்தில் கவிய வேண்டும் என்பதற்காகத்தான். இறைவனுக்கு மாத்திரம் அலங்காரம் பண்ணவில்லை, இறைவன் வீற்றிருக்கும் இரதத்திற்கும், இரதத்தின் கீழே இருக்கிற சக்கரம் முதற்கொண்டு தேர் அச்சுவரை உள்ள எல்லாவற்றிற்கும் அலங்காரம் செய்தார்கள். தேர் ஓடுகிற வீதிக்கு, வீதியிலுள்ள வீடுகளுக்கும் அலங்காரம் பண்ணினுர்கள். இந்த அழகில் கவரப்பெற்ற மனம் இவ்வளவுக்கும் நடு நாயகமாக விளங்குகின்ற இறைவன் திருவுருவத்தின் பால் கவிகிறது.

''உன்னைச் சிங்காரித்து உன்அழகைப் பாராமல்
என்னைச் சிங்காரித்து இருந்தேன் பராபரமே''

என்கிருர் தாயுமானவர்.

தூண்போலத் தம்முடைய உள்ளத்திலே இருக்கின்ற இறைவனை பிறரும் பற்றிக் கொண்டு இன்பம் அடைய, இறைவன் பால் அவர்கள் உள்ளங்களையும் ஈடுபடச் செய்ய அருணகிரிநாதர் தம்மிடமுள்ள மிகச்சிறந்த பொருளாகிய சொற்களின் குவியலினுலே அலங்காரம் பண்ணுகிருர். அந்த அலங்காரம்தான் கந்தர்அலங்காரம். 100 அழகான பாடல்களையுடைய நறுமண மலர்களால் ஆன மாலையை முருகப் பெருமானுக்கு சமர்ப்பிக்கிருர். அலங்கார நாயகனுகியமுருகப் பெருமானின் அருளால் அந்த மாலையிலுள்ள மலர்களின் மணத்தை நாமும் நுகர்ந்து முருகப்பெருமானின் அருளைப் பெறுவோமாக.

———

(தொடரும்

சிவ சிவ]

நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலே

திரு; ர. வேங்கிடரத்தினம் அவர்கள்,
E- 168 அண்ணு ரோடு, (ப்ளாக் 17)
நெய்வேலி-1.

ஞானசம்புந்த சுவாமிகள் இம்மண்ணியல் வாழ்வினைத் தூற்றித்திரியும் அடியார் வகையினைச் சேர்ந்தவரல்லர். இறைவன் திருவடித் தொழுது, இவ்வுலகில் நல்ல வண்ணம் வாழலாம் என்று பல பாடல்களில் அவர் கூறுவார். பிறவித் தளை நீங்கிப் பரம்பொருளோடு இணைந்துவிடும் சமயஇலட்சியத்திற்கு ஊறுஇன்றி, மண்ணியல் வாழ்வினை மகிழ்ச்சி மிக்கதாய் மாற்றிக் கொள்ள வகையும் வழியும் பரிந்து பகர்வன அவருடைய திருப்பதிகங்கள். இறைவனின் திருத்தாள் பணிந்து அடியாரோடு சேர்ந்து நல்ல முறையில் வாழலாமே!

நல்ல கதிக்கு யாருமோர் குறைவிலே என்பது அவர் அழுந்தத் திருத்தக் கூறும் வாக்கியமாகும்.

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

இப்புவிதனில் இன்பமாய் வாழமுடியும் எனக்கூறும் இப்பாடல் அடிக்கொருதரம் 'நல்ல' என்றுசொல்லும் ஒவ்வொரு வேளையும் நினைக்க வேண்டும். ஒவ்வொரு பொழுதும் தவருது பரமேசுவரனை எண்ணிவாழின், நல்ல காலத்திற்கு ஒரு குறைவுமிராது. கண்ணில் நல்லதன்றி வேறு ஏதுமே விழாத திருநகரமாகிய சுழுமலப் பதியில் எம்பிரான் மகளிர் தம்முள்மிக்க நல்ல பெண்ணுகிய பார்வதியுடன் கோயில் கொண்டுள்ளார். அவரை எண்ணில், நல்ல கதிக்கு ஒரு குறையும் இராது. சிவபெருமானை அவர் தம்திருத்தேவியுடன் என்றும் நினைந்து வாழ்வோர்க்கு மண்ணக வாழ்க்கை நன்ருகவே இருக்கும். சீகாழிச் சிவபெருமான் மங்கலம் அருள்வார்.

இவ்வாறு நன்மை ஆகும் என அறுதியிட்டுப் பிள்ளையார் பாடும் திருநாரையூர் எனும் பதிக்குப் போகலாம் பணம்

வந்து குவியும், நலன்கள் பலவும் நம்மை நாடிவரும் என்றே பாடல் தொடங்கும். இவை அப்படியொன்றும் தகாதஆசைகள் அல்லவே!

தனம்வரு நன்மையாகும் தகுதிக் குழந்து
வருதிக் குழன்ற உடலின்
இனம்வளர் ஐவர்செய்யும் வினையங்கள் செற்று
நினைவொன்று சிந்தை பெருகும்
முனம் ஒருகால் மூன்றுபுரம் வெந்துமல்கச்
சரமுன் தெரிந்த அவுணர்
சினம் ஒருகால் அழித்த சிவன்மேயச் செல்வத்
திருநாரை யூர்க்கை தொழவே.

முதலடியில் வரும் தனத்தை உயரியமுக்திச் செல்வம் எனக் கருதுவதற்கு ஏற்ற உளப்பாங்கு பெருமானை வழிபடுவோர்க்கு வந்தமையும். எனினும், ஈசன் இகவாழ்வு இனிது நிகழவேண்டியது அனைத்தையும் அள்ளியருள்வார் எனக் கொள்ளல் தவறு ஒன்றுமல்ல, பேரும் புகழும் பெறுதற்காக அல்லற்பட்டு வருந்தியலைந்து தவிக்கும் உடலிலே ஐந்துபேர் புகுந்து கொண்டு படாதபாடெல்லாம் படுத்திவைக்கிறார்கள். அவர்கள் ஒருவரைவிட்டொருவர் இணைபிரியாதவர்களாகவும் இருந்து, வம்பு செய்கின்றனர். ஐம்பொறிகளின் பொல்லாத் தனங்களை வென்று, பரம்பொருளில் உள்ளம் ஊன்றி நிற்பதற்கு எம்பிரான் உறையும், செல்வமும் சீரும் சிறந்து நிற்கும் நாரையூர்சென்று கரம்கூப்பி வணங்குதல் வேண்டும்என்பார் ஞானசம்பந்தர்.

முன்பு ஒருகாலத்திலே நடந்த கதையிது. மூன்று நகரங்கள் ஆகிய அரக்கரைச் சுட்டுச் சாம்பராகும் வண்ணம் அம்பு தொடுத்து, அவர்களுடைய வெகுளியாவும் ஐயனின் எதிரே நிற்கமுடியாமல் புரிந்து கொண்டு ஓட்டம் எடுத்து அழிந்தது. அரக்கரோடு அவர்தம் சினமும் வெந்து போயிற்று.

சிவபெருமான் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் மேவும் பதி திருநாரையூர்!

சென்று கம்குவிந்து வணங்க நன்மை ஆகும். நமக்கு இவ்வாழ்வில் அல்லல்தா வன அகப்பற்றும் புறப்பற்றுமே யாம் இரண்டினையும் ஒழித்தால், வாழ்வு இனிக்கும் என்றும்!

நம்முடைய உடைமை இது; நம் மக்கள் இவர் என்ற எண்ணங்கள் நம்மைக் கெடுக்கின்றன. உடைமைகளின் மீதும் உறவினர் மேலும் விரும்பிப் பாசம் வைத்து ஊரெல்லாம் நாலாத் திசைகளிலும் சுற்றியல்லற் படுகிறோம். இன்னல்கள் வரவரப் பெருகுகின்றன. இன்னும் நம் நிலைமை மோசமாகும். முன்னமேயே, இவ்வேட்கைகளை விடுத்து விட்டு, வேறொரு வேலை செய்யுமாறு புகலியர் திலகம் புகல்வார்.

நம்பொருள் நம்மக்கள் என்று
    நச்சிஇச்சை செய்து நீர்
அம்பரம் அடைந்து சால
    அல்லல் உய்ப்ப தன்முனம்
உம்பர் நாதன் உத்தமன்
    ஒளிமிகுத்த செஞ்சடை
நம்பன் மேவு நன்னகர்
    நலங்கொள் காழி சேர்மினே.

நம்பெருமான் உறையும் நல்ல நகராகிய சீகாழிக்குச் சென்று நன்மைகள் பெறலாமே என ஒரேவரியில் நல்லவழி இயம்புவது இப்பாடல்.

தேவாதி தேவனாகிய பரமேசுவரன். ஒப்புயர்வற்றதனிப் பெரும் நாயகன்; ஒளிவீசித் திகழும் செஞ்சடையான் நம் சிவபிரான் உறையும் பதியான சீகாழியோ சிறப்புகள் அனைத்தும் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. அந்நகரத்தை அடையுமாறு அவ்வூர் அடியவர் அருள்வார்!

எந்தக் கடவுளைக் கைதொழுது என்ன? அவரவர் தலையெழுத்துப்படியே எதுவும் நிகழும். விதிப்படி வருவன வாராமற் போகா என்பது நம் பழைய நம்பிக்கை கிரகங்கள் வாழ்க்கையை வகுக்கின்றன எனும் பேச்சு எப்போதுமே உண்டு. ஈசனை அடிபணியின் என்ன, பணியாதென்ன? வருவது வந்துதானே தீரும் என்பது கடவுள் நம்பிக்கைக்கு ஊறு செய்யும் வாதமாகும். எதற்கு இறைவனைக் கும்பிட வேண்டும் எனக்கேட்போர்க்கு ஆளுடையபிள்ளையார் விடை தருவார்.

ஆட்பாலவர்க் கருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான் புகிலளவில்லை கிளக்க வேண்டா
கோட்பாலனவும் வினையும் குறுகாமை எந்தை
தாட்பால் வணங்கித் தலைநின் றிவைகேட்க தக்கார்.

கோள் என்பது கிரகம். ஈசன் தாள்பற்றிப் பணிபின், கோள் என்செய்யும் என உறுதிப் பாட்டுடன் கேட்டது இப்பாடல்.

கிரகங்களின் சஞ்சாரத்தின் விளைவாகவாழ்வில் நிகழ்வன இன்ப துன்பங்களாம். கோளின் ஆட்சி நம் முன்வினைகளின் விளைவாக அமைவது, இவ்விரண்டுமே எந்தைபின் திருவருள் முன் அடிபட்டுப்போம்.

இப்பாடலில் திருஞானசம்பந்தர் பெருமான் நேருக்கு நேர் விளக்குகிறுப் போலப் பேசுவார். இறைவனின் பழம் பெருமைகளையும் ஆட்கொள்ளத் தக்க அடியார்களுக்குத் திருவருள் கூர்ந்து உய்விக்கும் மாண்பினையும் பற்றி எவரும் கேட்பின், அவை சொல்லத் தரமன்றே? சம்பந்தர் தம் மாலேயே புலப்படக் கூறல் ஆகாதென்பார். தகுதிவாய்ந்த பெருமக்கள் மட்டும், கோளுக்கும் பழவினைகளுக்கும் மீறி நிற்கும் எம்பிரானின் மாட்சிமையினை உணர்ந்து உய்வராக!

எனவே, நாளும் கோளும் நம்பிரான் அடியார்களை ஒன்றும் செய்துவிடமாட்டா.

அடியார்க்குக் கோள்கூடி நின்று தீது எதும் செய்ய முடியாது. இவ்வுண்மையினைப் பிள்ளையார் வற்புறுத்துவார்.

கோள றுபதிகம் இவ்வாறு எழுந்ததுதான் மிகஅக்கறை யோடு, இருக்கும் நவக்கிரகங்கள் பெயர்கள் யாவும் வரிசை யாக எடுத்தியம்பி இறுதியில் எம்பிரான் உள்ளத்தில் உள்ள வரை, கோளினால் தீங்கேதும் வரவொண்ணாது என முடிப் பார். எள்ளி நகையாடுகிறுப் போல், சீகாழிச் செல்வர் ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனியென வாரத்தின் கிழமைகளை வரிசையாய் எண்ணுகிற பாங்கில் கூறிப் பாம்பிரண்டினையும் சொல்லி, எல்லாம் நன்மைக்கே என வெகு அலட்சியமாக – சிறுரைப் பற்றிய இறுமாப்புடன்–கோள்களை ஒதுப்புறமாகத் தள்ளிவிடுவார்,

வேயிறுதோளி பங்கன் விடம்உண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறுதிங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனல்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளி சனி பாம்(பு) இரண்டு முடனே
ஆசறுநல்ல நல்ல அவைநல்ல நல்ல அடியார்
அவர்க்கு மிகவே!

கிரகங்களைக் கீழ் இறக்குதல் பின் நான்கடிகள்; இறைவனைப் புகழ்ந்தேத்துதல் முதனான்கடிகள்! மூங்கிலைப் போன்ற தோள்களைக் கொண்ட அம்மையை ஒருபாகத்தே உடலில் ஏற்றவர்; நஞ்சுண்ட நீலகண்டர்!

நல்ல இசைஎழுப்பும் வீணையைவாசித்துக் கொண்டுள்ள அவர் தம் திருமுடியில் மாசிலா மதியும் தூயக்கங்கையும் உள்ளனர். அவர்மட்டும் நம் உள்ளத்தில் குடிபோந்தால் போதும். நமக்கு நாளும் கோளும் நல்லவையாகவே அமையும்.

அந்தஒருவர் உள்ளத்தில் புகுந்துவிடின், ஒன்பதுஎன்ன, ஓராயிரம் கிரகங்கள் சேர்ந்தும் அடியாரை அசைக்க முடியாது! இறைவனின் மெய்யான தொண்டர்க்குத் தீங்குகள் வாரா!

வேண்டுமென்றே, ஆளுடைப்பிள்ளையார் ஒன்பதுகிரகங்களின் தீமை இழைக்கும் ஆற்றலையும் சிறிதாக்கிக் கூற வெண்ணி, நல்லநல்ல நல்லநல்ல என்று நான்கு முறை நவின்று அந்நலன் மிகுதியாக அமையும் என்பதற்கு மிகவே என்று பாடுவார்,

திருஞானசம்பந்தர்சுவாமிகள் அடியார்களின் வாழ்க்கை பல்வேறு நலன்கள் நிறைந்து நன்றாக இலங்குவதாகும் என்று பாமரர்க்கு அறிவுறுத்த இவ்வண்ணம் பாடுவார். இறையடியார் இடர்படுவோரல்லர்!

நமனையஞ்ச வேண்டாம்; நரகவாதனை வாராது; நாள் ஒன்றுமே செய்யாது: நட்சத்திரங்கள் நம்மை அண்ட மாட்டா. கோள்யாவும் நல்லனவாகவே நமக்கு நடந்து கொள்ளும், இன்னும் என்ன வேண்டும்?

திருவலஞ்சுழி சுவேத விநாயகருக்குச் சதுர்த்தி

மோதக நிவேதன நிதி ரூ. 1500/-

காவிரி வலம் சுழித்துச் சென்றமையால் திருவலஞ்சுழி என்னும் பெயரையுடையதும், தேவர்கள் விநாயகரை வணங்காமல் பாற்கடலைக் கடைந்தமையின் நஞ்சுவரப்பின் பாற்கடல் மணலால் விநாயகரைத் தாபித்து வணங்க அமிர்தம் வர அவ்விநாயகரை இந்திரன் பூசித்துத் திருவலஞ்சுழியில் இருந்து பின் அதனை எடுக்க முடியாமையின் திருவலஞ்சுழியிலே வீற்றிருந்து ஆண்டு தோறும் ஆவணித் திங்கள் வளர்பிறைச் சதுர்த்தியில் எல்லாப்பேறுகளும் வழங்கும் சுவேத விநாயகர் எழுந்தருளிய தலமாகியதும், திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடியருளிய திருநெறிய தமிழ் பெற்றுள்ளதுமான திருவலஞ்சுழியில் கபர்த்தீசர் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள சுவேத விநாயகர் ஆகிய வெள்ளைப் பிள்ளையாருக்கு ஆண்டு முழுவதும் எல்லாச் சதுர்த்திகளிலும் மோதகம் நிவேதித்துச் சேவார்த்திகளுக்கு வழங்கும் பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து 21-ஆவது அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசிமுத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இம்முதற்பொருள் 36-ஆவது தருமமாக நிறுவப் பெற்றுள்ளது. இது "திருவலஞ்சுழி சுவேத விநாயகருக்குச் சதுர்த்தி மோதக நிவேதன நிதி" எனப்பெயர் பெறும்,

2 இதற்குரிய முதற்பொருள் ரூ 1500/- ஓராயிரத்து ஐந்நூறு. இது ஆண்டுதோறும் 7% வட்டி தரக்கூடிய நீண்டகால முதலீடாகக் கும்பகோணம் சென்ட்ரல் பாங்கில் முதலீடு செய்யப்பெற்றுள்ளது. எண். 29/46 ரூ. 500/- தேதி 13-3-72 எண் 29/52 ரூ 1000/- தேதி 1-4-72; ஆக ரூ 1500/-இது நம்மாலும் நமக்குப்பின்வரும் ஸ்ரீகாசிமடத்து அதிபர்களாலும் பரிபாலனம் செய்யப்பெற்றுவரும்.

3. இம்முதற் பொருளினின்றும் கிடைக்கும் வட்டித் தொகையினின்றும் ஆண்டு முழுவதும் எல்லாச் சதுர்த்திகளிலும் சதுர்த்தி ஒன்றுக்கு ரூ. 4/- செலவில் மோதகம் செய்வித்து நிவேதனம் செய்விக்கப் பயன்படுத்தப் பெற்று வரும்.

நிவேதித்த மோதகத்தைச் சேவார்த்திகளுக்கு வழங்கச்செய்யலாம்.

4. வட்டி வரவிற் கேற்ப இச்செலவுத்தொகை குறைக்கவும் கூட்டவும் பெறும். இவ்வட்டி வருமானம் வேறு எம்முறையிலும் பயன்படுத்தப்பெற மாட்டாது.

5. இம்முதற்பொருள் நம் பேரிலும் நமக்குப்பின் ஸ்ரீ காசி மடத்து அதிபர்கள் பேரிலும் இருந்துவரும். இத்தொகை திருப்பியளிக்கப்பெற்றதும் அதிக வட்டி வரக் கூடிய நீண்டகால முதலீடுகளிலோ அல்லது அரசியல் கடன்தாள்களிலோ முதலீடு செய்யப் பெற்று வரும்.

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்–உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

Tirupananda } (Sd.)Kasivasi Muthukumaraswami Tambiran
25—4—1974

Registered at the Tiruvidaimarudur Sub–Registrar's Office on 27—4—1974 as Document No. 11 of 1074 Book 4, Volume 59 Pages 189-190.

மூன்றும் திருமுறையின்
முதற்பாடல்கள் — உரை

திரு. தா. ம. வெள்ளைவாரணம் அவர்கள்

71. திருவைகாவூர் பண்: சாதாரி

கோழைமிட றாககவி கோளுமில
வாகஇசை கூடும் வகையால்
ஏழையடி யாரவர்கள் யாவைசொன
சொல் மகிழும் ஈசன்இடமாம்
தாழைஇள நீர்முதிய காய்கமுகின்
வீழநிரை தாதுசிதறி
வாழையுதிர் வீழ்கனிகள் ஊறிவயல்
சேறுசெயும் வைகாவிலே.

பொழிப்பு: இளநீரையுடைய தென்னை மரத்தின் முற்றிய காய்கள் பாக்கு மரத்தின்மேல் வீழ (அதனால்) பாக்கினது வரிசையான குலைகள் சிதற (அதனால்) வாழையினின்று உதிர்ந்து வீழ்கின்ற பழங்கள் ஊறிப்போய் வயல்களைச் சேறாக்கும் திருவைகாவூர் என்னும் தலம், சளிகட்டிய கண்டத்தினராகக் கவி பாடும் வன்மையும் இலராகத் தமக்கிசைந்த இசையமைப் போடு அறிவில் ஏழையரான அடியார்கள் எப்படிப் பட்டதாகச் சொன்ன சொல்லையும் கேட்டு மகிழ்கின்ற இறைவனாகிய சிவபெருமானுடைய இடமாகும்.

கோழை-சளி; மிடறு-கண்டம்; கவிகோள்-கவிபாடும் வன்மை; ஏழை-அறிவில்லாதவர்; தாழை-தென்னை; கமுகு-பாக்குமரம்; தாறு-குலை; வைகாவில்-வைகாவூர். ஞானசம்பந்தர் திருவைகாவூர் அணைந்து இப்பதிகத்தை அருளிச் செய்தார். இப்பதிகத்தைப் பாடவல்லார் உருத்திரர் எனச் சாருபம் பெற்றுச் சிவலோகத்தில் பெரிய புகழோடுபிரியாமல் வாழ்வர்.

72. திருமாகறல் பண்: சாதாரி

விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள்
பாடல்விளை யாடலரவம்
மங்குலொடு நீள்கொடிகள் மாடமலி
நீடுபொழில் மாகறலுளான்

கொங்குவிரி கொன்றையொடு கங்கைவளர்
திங்களணி செஞ்சடையினன்
செங்கண்விடை அண்ணல்அடி சேர்பவர்கள்
தீவினைகள் தீருமுடனே.

பொழிப்பு: இஞ்சிவிளையும் வயலில் நிறைந்த உழத்தியரின் பாடலாலும் விளையாட்டாலும் எழும் ஓசையும், மேகத்துடன் நீண்ட கொடிகள் நிறைந்த மாடங்களும், நீண்ட சோலைகளும் உள்ள திருமாகறலில் இருப்பவனும் மணம் விரிந்த கொன்றைப் பூவோடு கங்கையும் வளரும் திங்களும் அணிந்த செஞ்சடை உடையவனும் சிவந்த கண்ணையுடைய திருமாலாகிய விடையை உடைய தலைவனும் ஆகிய சிவபெருமானது திருவடிகளை இடைவிடாது நினைப்பவர்களின் தீவினை உடனே தீரும்.

விங்கு-இஞ்சி; கழனி-வயல்; கடைசியர்-உழத்தியர்; அரவம்-ஓசை; மங்குல்-மேகம்: கொங்கு-மணம்; சேர்பவர்-இடைவிடாது நினைப்பவர். ஞானசம்பந்தர் மாகறல்இறைவன் அடியையே பொருளாகக் கொண்டு இப்பதிகத்தை அருளிச் செய்தார். இப்பதிகத்தை உணர்ந்தவர்க்குத் தொல்வினைகள் தளர்ந்து ஓடிவிடும்.

73. திருப்பட்டீச்சரம் பண்: சாதாரி

பாடன்மறை சூடன்மதி பல்வளைஒர்
பாகம்மதில் மூன்றொர் கணையால்
கூடஎரி ஊட்டிஎழில் காட்டிநிழல்
கூட்டுபொழில் சூழ்பழையுள்
மாடமழ பாடியுறை பட்டிசரம்
மேயகடி கட்டர வினர்
வேடநிலை கொண்டவரை வீடுநெறி
காட்டிவினை வீடுமவரே.

பொழிப்பு: பாடுவது வேதமாகவும் சூடுவது பிறையாகவும் ஒருபாகம் பல வளையணிந்த உமாதேவியாகவும் கொண்டு முப்புரத்தை ஒரே அம்பினால்ஒருசேர எரியும்படிச் செய்து தனது வீரத்தின் அழகைக் காண்பித்து, நிழல்மிகுக்கும் சோலை சூழ்ந்த பழையாறையிலே மாடம் நிறைந்த மழபாடியிலே உளள பட்டீச்சரம் என்னும் கோவிலில் தங்கிய இருப்பிற்கட்டும் அரவை உடையவரான சிவ பெருமான் சிவ வேடத்தை நிலையாகக்கொண்ட அடியவர்க்கு முத்திநெறியைக் காண்பித்து அவரது தீவினைகளையும் போக்கி விடுவார்.

மறை—வேதம்; பல்வளை என்றது பல வளையணிந்த உமாதேவியைக்குறிக்கும்; கணை-அம்பு; பழசை—பழையாறை நகரம்; அதற்கு உட்பட்ட ஊர் மழபாடி; அதில் உள்ள கோயில் பட்டீச்சரம்; கடி-இடுப்பு; வேடம்—திருநீறு உருத்திராக்கம் பூணும் சிவவேடம், வீடுதல்—போக்குதல்; ஞானசம்பந்தர் பட்டீச்சரத்து இறைவன் முன் இப்பதிகத்தை அருளிச் செய்தார். இப்பதிகத்தைச் செப்பவல்லவரது வினைநில்லா.

74. திருத்தேவூர் பண்: சாதாரி

காடுபயில் வீடுமுடை ஓடுகலன்
மூடுமுடை ஆடைபுலி தோல்
தேடுபலி ஊணதுடை வேடமிகு
வேதியர் திருந்துபதி தான்
நாடகம தாட மஞ்ஞை பாடஅரி
கோடல்கைம் மறிப்பநலமார்
சேடுமிகு பேடை அனம் ஊடிமகிழ்
மாடமிடை தேவுரதுவே.

பொழிப்புரை: சுடுகாட்டைப் பழகும் வீடாகவும், முடை நாற்றமுள்ள தலைஓட்டை உண்கலமாகவும், புலித்தோலை உடம்பு மூடும் உடையாகிய ஆடையாகவும், வீடுதோறும் தேடும்பலியை உணவாகவும் உடைய வேடத்தால் மிக்க வேதியராகிய சிவபெருமானுக்குத் திருந்திய தலமானது யாதெனில், மயில் நாடகமாட வண்டு பாடக்காந்தள் கை கொட்ட நலம் நிறைந்ததும்; பெருமைமிக்க பெண்அன்னம் ஆணோடு ஊடிப்பின் கூடி மகிழ்வதும், மாடங்கள் நெருங்கியதும் ஆன திருத்தேவூர் ஆகும்.

முடை-புலால் நாற்றம்: வேதியர்—வேதத்தை அருளிய சிவபெருமான்; பதி-திருத்தலம்; மஞ்ஞை-மயில், அரி—வண்டு கோடல்—காந்தள்; மறித்தல் என்பது கை கொட்டுதலைக் குறித்தது; சேடு-பெருமை ஞானசம்பந்தர் திருத்தேவூர் அணைந்து போற்றி இப்பதிகத்தை அருளிச் செய்தார். இப்பதிகத்தைப் பாடவல்லவர் குற்றமற்றவராவார். (தொடரும்)

உ
சிவ சிவ

சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே அடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் 'திருமுறை வெளியீடுகள்

		ரூ.	பை.
1	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் (புதிய பதிப்பு) ...	3	50
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த காசிக்கலம்பகம் மூலமும் அரும்பதக்குறிப்பும் ...	0	40
3	,, சிதம்பர மும்மணிக்கோவை ,, ...	0	20
4	,, மதுரைக்கலம்பகம் ,, ...	0	40
5	,, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் ,, ...	0	60
6	திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பா—மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்—மதுரைக்கலம்பகம்—நீதிநெறி விளக்கம்—மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை மதுரை மீனாட்சியம்மை குறம் ...	2	70
7	திருவாரூர் நான்மணிமாலை—முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் ...	1	25
8	திருவாரூர் நான்மணிமாலை உரையுடன் ...	0	50
9	சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச் செய்யுட்கோவை தில்லைச் சிவகாமியம்மை இரட்டை மணிமாலை ...	1	00
10	பண்டார மும்மணிக்கோவை-காசிக்கலம்பகம் சகலகலாவல்லி மாலை ...	1	00
11	நீதிநெறி விளக்கம்-ஆங்கிலமும், ஹிந்தியும் ...	0	50
12	,, மூலம் ...	0	10
13	நீதிநெறி விளக்கமும் நன்னெறியும்—மூலம் ...	0	15
14	கந்தர்கலிவெண்பா மூலம் மட்டும் ...	0	10
15	கந்தர்கலிவெண்பா (புதிய பதிப்பு) ...	0	05
16	அபிராமியந்தாதி மூலம் ...	0	15
17	திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு) ...	4	25
18	திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு) ...	2	75
19	சுந்தரர் தேவாரம் (புதிய பதிப்பு) ...	1	75
20	திருவாசகம் (மூலம்) ...	0	70
21	திருக்கோவையார் (பேராசிரியருரையும்பழையவுரையும்) ...	3	50
22	9-ம் திருமுறை-திருவிசைப்பா திருப்பல்லாண்டு மூலம் ...	0	56
23	,, ,, தெளிவுரை ...	1	50
24	திருமந்திரம் (மூலம்) புதிய பதிப்பு ...	2	50
25	பதினோராந் திருமுறை (புதிய பதிப்பு) —	2	50
26	பேராயிரப் பனுவல்கள் ...	0	10
27	திருத்தொண்டர் புராணசாரம் ...	0	40
28	அம்மையார் அற்புதத் திருவந்தாதி ...	0	25
29	திருக்கைலாய ஞானவுலா-உரையுடன் ...	0	50
30	திருக்கயிலைத் திருமுறை ...	0	37
31	பழமொழித் திருமுறை ...	0	25
32	அப்பர்விழா வெளியீடு ...	0	25
33	Hymns and Proverbs ...	0	35
34	திருவாரூர்-திருப்பனுவல்கள் —	0	10

Registered With the Registrar of Newspapers for India
Under No. R. No. 1485/57.
Regd No. M. 5574

35	குமரகுருபரர் வரலாறும், அற்புதத்தேவாரத்திரட்டும்	...	0 30
36	கந்தபுராணச் சுருக்கம் (மூலம் மட்டும்)	...	1 75
37	திருவாசகம் தேனும் கனியும்	...	0 15
38	தேவாரம் பாடும்பயன்	—	0 15
39	காசிக்கலம்பகம் உரை நடை	...	0 15
40	தாழைத் திருமுறை	..	0 15
41	ஐந்து நீதி நூல்கள்	..	0 10
42	தவக்கிரகமாண்பு	..	0 25
43	ஸ்ரீ சைலம்	...	0 10
44	திருவுசாத்தனக் கல்லெழுத்துக்கள்	...	0 37
45	திருவெம்பாவை - திருப்பள்ளியெழுச்சி	...	0 10
46	செந்திலாண்டவன் மகிமை	...	0 15
47	திருக்குறள்-உரைக்கொத்து-அறத்துப்பால் (4-ம் பதிப்பு)	...	2 00
48	திருமுருகாற்றுப்படை	..	0 15
49	தேவார வைப்புத்தல விளக்கம்	...	0 15
50	திருக்குறள் மணக்குடவர் உரை (முப்பாலும் சேர்ந்தது)	...	2 00
51	திருக்குறள் மூலம்	...	0 25
52	திருக்குறள்-அறத்துப்பால்-சிற்றுரை	..	0 20
53	திருக்குறள்-பொருட்பால்-பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம்	..	0 13
54	முதுமொழிமேல்வைப்பு (குறிப்புரை)	..	0 60
55	திருக்குறள் அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழிபெயர்ப்பும்	..	1 50
56	திருக்குறள்-பொருட்பால் ,,	...	2 50
57	திருக்குறள்-காமத்துப்பால் ,,	..	1 00
	ஷை 53, 54, 55 திருக்குறள் 3 புத்தகமும்	...	4 00
58	கந்தர்கலிவெண்பா சகலகலாவல்லிமாலை ஆங்கிலம் ஹிந்தி மொழிபெயர்ப்புடன்	...	1 25
59	திருவருட்பயன் மூலம் இந்தி, ஆங்கிலமொழிபெயர்ப்புடன்	..	1 00
60	சிவகொழுந்து தேசிகர் பிரபந்தம்	...	3 00
61	அகத்தியர் தேவாரத்திரட்டு (புதிய பதிப்பு)	...	0 50
62	மங்கலம்	..	0 20
63	திரு ஆனைத் திருமுறையும் உருத்திராக்க விதானமும்	..	0 20
64	கோதனத் திருமுறை	..	0 10
65	தோடுடைய செவியன் கோவண ஆடையன	...	0 15
66	பண்டார மும்மணிக்கோவை உரை நடை	...	0 15
67	மகேசுவரபூசை	...	0 15
68	கந்தர் அநுபூதி-சுவாமிமலை கும்பாபிஷேக நினைவு மலர்	...	0 10
69	திருவிசைப்பா தேனும் கனியும்	...	0 10

மேலே கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்
2. "தியாகராஜ விலாசம்" 53. பிள்ளையார் கோவில் தெரு, திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை-600005

அச்சிட்டது:- குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் 628601 -74